குருபாதம்

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 18] விகாரி ஆண்டு ஆனித்திங்கள் 10—7—59 [இதழ் 8

ஆசிரியர்:- வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
துணை ஆசிரியர்:- வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

குருநாதரது மகா கயிலாச தரிசனம்

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 19—6—59 காலையில் வழிபாடுகள் அனைத்தும் செய்தும் செய்வித்தும் திருக்கயிலாயமலைக் கடவுளை வழிபடக் கருதிக் காசி வழியாக எழுந்தருளினார்கள். அத் திருவருட் செலவு குறித்த கட்டுரையின் முற்பகுதி இவ்விதழில் 482 ஆவது பக்கம் முதலாக வெளியிடப்பெற்றுளது. அன்பர்கள் படித்து நலம் பலவும் பெறுவார்களாக.

"ஞானசம்பந்தம்"

உட்பொருள்

பக்கம்

1. சிவ ஞான போதம் (கட்டுரை 6) ... 477
2. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது மகா கயிலாச யாத்திரை ... 482
3. பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள் ... 486
4. சிவாகம பரிபாலனம் ... 490
5. மெய்ஞ்ஞானச் செல்வர்கள் ... 494
6. சவுந்தரியந்தாதி ... 498
7. பதினோராந் திருமுறையில் ... 500
8. நன்றி ... 504
9. இதிஹாஸம் ... 508
10. நாவலர் காவலர் ... 512
11. செய்திகள் ... 516
12. எதிர்காலம் ... 521

மகாகயிலாயத் தலயாத்திரையில்

வாரணாசி



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் காசிக்குச் சென்ற அன்பர்களும்.

உ
குருபாதம்
வாழ்க உலகெலாம்!

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 18 | விகாரி - ஆனி 10—7—59 | இதழ் 8

உ
திருச்சிற்றம்பலம்

போன்றயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

கட்டுரை 6

(மலர் 18, இதழ் 7, பக்கம் 424 இன் தொடர்ச்சி)

இரண்டாவது அதிகரணத்து மூன்ருவது பிரிவினது விளக்கத்தின் எச்சம் இது :-

புத்தர் தடை :- உலகம் உள்ளதேல் உள்ளதற்கு 'உண்டாதல்' வேண்டா. 'சற்காரிய வாதம்' அடாது,

விடை :- 'இல்லதற்குத் தோற்றம் இன்மையின்
னும் இரண்டாவது அதிகரண வாக்கியத்தின்கண்
(முதலாவது) ஏதுவை வலியுறுத்துவது :-

" இலயித்த தன்னிலில யித்ததாம லத்தால்
இலயித்த வாறுளதா வேண்டும் — ...... "

உலகம் உள்ளதே, அது சங்கார காலத்தில் ஒடுங்கியது. ஒடுங்கிய அவ்வுலகம். ஒடுங்குதற்கு நிலைக்களம் ஆன சங்கார கருத்தாவின் நின்றும் மீள உளதாகும் ; படைப்புக் காலத்தில்

தடை :- ஒடுங்கிய உலகம் ஒடுங்கியவாறே ஒழியாமல் மீள உண்டாக வேண்டா ; வேண்டின் ஒடுங்காமலே நிலை பெற்றிருக்கலாம். அவ்வாறின்றி' ஒடுங்குதலும் மீள உளதா தலும் ஏன் ?

விடை :- உளதான உலகம் கருமமலம் பக்குவப்பட வேண்டி ஒடுங்கும். ஆணவமலம் பக்குவப்படவேண்டி மீள வுண்டாகும்.

தடை :- அத் தன்மையது ஆயின் முன் இருந்த உலகம் அழிய வேறு தோன்றும் எனல் வேண்டும். அவ்வாறு சோல்லாமல், அதுவே ஒடுங்கி நின்று மீள உளதாகும் என்றனே. அதற்குப் பிரமாணம் யாது ?

விடை :- ஒடுங்கிய உலகம் ஒடுங்கிய அவ்வாறே தோன்றும், அது பலராலும் விரும்பப்படும். அங்நியமம் இல்லை ஆயின், நேல் கமுகாய் நீளாது நேல்லாய் நீளுதற்கு ஏது யாது ? என்னும் தருக்கமே அறியப்பண்ணும்.

[இதனுல், இல்லதும் உள்ளதும் அல்லாத போருள் தோன்றும் என்னும் சூன்யவாதிகளும் உள்ளதும் இல்லதும் ஆன போருள் தோன்றும் என்னும் அநேகாந்திவாதிகளும் கூறுங் கூற்றுப் போருந்தாமைலய அறியலாம்] இல்ல தற்குத் தோற்றம் இல்லை. உள்ளதற்கே தோற்றம் உண்டு என்று முற்கூறியதே இதில் வீளக்கப்பட்டது அதனுல் இதனை உதாரணம் என்பது போருந்துமாறு எங்கனம் ?

பாஞ்சராத்திரிகள் தடை :- சற்காரியவாதத்தின் அவ்வக் காரியங்கள் தத்தம் முதற் காரணத்து ஒடுங்கும் என்றே

கோள்ளலால், உலகிற்கு முதற்காரணம் ஆகிய மூலப்பகுதி வாசுதேவன் உரு ஆதலால் உலகம் அவன் மாட்டு ஒடுங்கும். இதுவே அமைவுடையது. இவ்வாறு அன்றி முதற்காரணத்தின் வேருய் நிமித்த காரணம் எனக்கோண்ட சங்கார கர்த்தாவின் மாட்டு ஒடுங்கும் எனல் போருந்தாது.

விடை :- 'ஒடுங்கின சங்காரத்தின்' 'இலயித்த தன்னில்' என முற்கூறிய குறிப்பின் விளக்கம் :-

'இலயித்தது
அத்திதியில் என்னின் அழியாது + அவை அழிவது
அத்திதியும் ஆதியும் ஆம் அங்கு'

உலகம் ஒடுங்கியது அந்தப் பிரகிருதி வடிவாகிய (ஸ்திதி கர்த்தா என்னும்) காப்புக் கடவுளின்கண் என்பாயேல், நீ அங்கனம் கோண்டாலும், மூலப்பிரகிருதிக்கு மேல் உள்ள புவனங்கள் அதனுல் வியாபிக்கப்படாமையின், கீழ் உள்ள ஏகதேச மாத்திரையே ஆண்டு ஒடுங்குவது அன்றி, மாயா காரியத்தோகுதி முழுதும் அங்கு ஒடுங்காது.

வினு :- அப்படியாயின், மாயாகாரியத் தோகுதிமுழுதும் எங்கு ஒடுங்குவது ?

விடை :- அக் காப்புக் கடவுளும் படைப்புக் கடவுளும் தோன்றுதற்குக் காரணமாகிய அவ் வழிப்புக் (சங்கார) கடவுளிடத்தே அவ்விருவரோடுங் கூட ஒடுங்குவதாம் அத் தோகுதிமுழுதும்.

வினு :- 'இலயித்தது' என்று கூறிய சற்காரியவாதத் தால் விளங்குவது யாது ?

விடை :- இலயித்த நிலை (அவத்தை)யில் அவ்வக் காரியசத்தி சமூகமாய்ச் சூக்குமமாய் நிற்பது ஒன்று உண்டு. அதுவே முதற்காரணம் எனப்படும் மாயை. அதன் காரியமே தோன்றி நின்று ஒடுங்கும் எனப்பட்ட அசேதனப்பி பஞ்சம்.

வினு :- படைப்புக் கடவுளை உடன் கூறியது என் ?

விடை :- இரணியகருப்ப மதத்தையும் மறுத்தற் போருட்டு.

சாங்கியர் தடை :- உலகிற்கு முதற் காரணம் மாயை, காரியமான உலகம் காரணமான மாயையில் ஒடுங்கும். அம்மாயையே அன்றி நிமித்தகாரணன் என ஒருவன் உளன் என்று கொண்டனே. கொள்ளினும், அம் மாயையில் ஒடுங்குவதன்றி அந்நிமித்த காரணன்பால் ஒடுங்கும் என்றல் பொருந்தாது. யாது யாண்டு ஒடுங்கும்? அஃது அதனில் உற்பத்தியாம் என்னும் அவிநாபாவத்தால் மாயையின் ஒடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும். இதற்கு ஓர் இறைவன் வேண்டா.

விடை :- 'செய்வோர் இன்றிச் செய்வினையில்லை' என்றதன் விளக்கம் இது :-

" வித்துண்டா மூலம் முளைத்தவா தாரகமாம்
அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால் - வித்தகமாம்
வேட்டுவனும் அப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டுவனே மண்போற் குளிர்ந்து, "

மாயை வித்து. உலகம் முளை. வித்தினின்று முளை தோன்றுவதுபோல மாயையிலிருந்து உலகம் தோன்றும். வித்துக்கு ஆதாரம் நிலம். அது குளிர்ந்தபோது அதன்கண் உள்ள வித்தினின்றும் முளை தோன்றும். மாயைக்கு ஆதாரம் இறைவனது ஆற்றல் (சிவசக்தி), அச் சத்தி சங்கற்பித்த போது அதன்கண் உள்ள மாயையினின்றும் உலகம் தோன்றும். நிலம் போல்வது சக்தி. நிலத்தின் குளிர்ச்சி போல்வது சத்தி சங்கற்பம். உயிர்களின் வினைக்கு ஈடாக அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமல் பயக்கும் சதுர்ப்பாடு மாயைக்கு உண்டு. அதை இவ்வெண்பாவில் 'வித்தகம்' என்றதாகஉரைத்தனர். மாயைக்கு அவ் வித்தகம் சத்திசங்கற்பத்தின் வழி வந்ததே. அது நிலங்குளிர்ந்தவழி வித்துக்கு முளையைத் தோற்றுதல் வருமாறு போல்வது. மாயையின் ஒடுங்கித் தோன்றிய உலகம் அம் மாயைக்கு ஆதாரமாய் நின்ற இறைவனது சத்தியின் ஒடுங்கித் தோன்றியதேயாகும். நிலம் குளிர்ந்த வழி வித்து அதன் கண் கிடந்தன்றி முளையைத் தோற்றுதவாறு போலச் சத்தி சங்கற்பித்தவழி மாயை அச்சத்தியின்கண். கிடந்தன்றி

உலகைத் தோற்ருது. இதனுல், ‘உயிரவையோடுங்கிப் பின்னும் உதிப்பது என் அரன்பால்’ எனச் சேதனப்பிரபஞ் சத்துக்கும், ‘உலகுஅவன் உருவிற்ரேன்றி யோடுங்கும்’ என அசேதனப் பிரபஞ்சத்திற்கும் (சேதனப்பிரபஞ்சத்திற் கும் இஃது உரியதே) கூறியவாறுணர்க.

[வித்துண்டாக என்று சற்காரியத்தை வலியுறுத்தினமையால் வித்து இல்லாதவழி நிலத்தினின்றும் முளைதோன்ருத வாறு போல், மாயை இல்லாத வழிப் பிரமத்தினின்றும் உலகம் தோன்ருது. இதனுல், பரிணுமவாதிகளையும் மாயை அநிர்வசனம் என்னும் மாயாவாதிகளையும் மறுத்தவாருயிற்று.]

வித்தும் நிலனும்போல் என்றதால், மாயை முதல்வனின் வேறுபொருள் அன்று என்னும் சிவாத்துவித சைவரையும் பாஞ்சாத்திரிகளையும் மறுத்தவாருயிற்று

விஞ :- முதல்வன் பலவேறுவகைப்படச் சங்கற்பித்தல் ஏன்?

விடை :- அவ்வவ்வுயிர் செய்யும் விளையால்.

விஞ :- விளைவயத்தால் இறைவன் தோற்றுவிப்பான் ஆயின், தன்வயத்தன் ஆகான், சுதந்திரஹீனன் ஆவான், அவனுக்குச் சர்வகர்த்திருத்துவம் ஏது ?

விடை :- வேட்டுவனுதலை விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவைக் கொடுக்குமாறுபோல, இறைவனும் அவ்வவ்வுயிர் வேண்டும் உருவைக் கொடுத்து, அவ்விளைக்குத் தக்க பயன்களையும் கூட்டுவன். ஆதலால் அவனது சுதந்திரத்திற்கு இழுக்கு இல்லை. ‘கூட்டுவனே’ என்பதில் ஏகாரம் அசை, ‘கூட்டானே’ என்னும் பாடமுமுண்டு.

சிவஞானபோத வெண்பாவெல்லாம் எதுகைமோனை முதலியவற்ருல் ஒரு சிறிதும் குறைபாடுடையன அல்ல. அவ்வுண்மையை நோக்குவார், இப்பாடத்தையே இசைகள். இதுவும் பழைய பாடமேயன்றிப் புதியது அன்று. மண்போல் என்றதில், ‘போல்’ அசை என்ருர் சிவஞானமாமுனிவர்.

(தொடரும்)

மகா கைலாச யாத்திரை

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள்
ஆதீனம் சூப்பரின்டேண்ட்டேண்ட், தேவஸ்தானம் பிரிவு

அப்பர் பெருமான் ஐயாற்றில் கைலைக்காட்சி கண்டார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் திருமுறைப் பாராயணத்தில் அந்தப்பதிகம் வந்தது " கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதனகண்டேன் '' என்ற உறுதிமொழி அப்பதிகத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதுவும் பெருமான் இன்னின்ன வண்ணம் காட்சி தந்தான் அத்திருவோலக்கக் காட்சியை இப்பூதவுடலேயே கண்டேன். என்றேல்லாம் பேசப்பட்டிருக்கின்றன. அத்திருமலையை - கயிலையை - சிவபெருமானுறையும் பெரும்பதியை - திருவடி உண்மையை நேரிலே கண்டுவணங்கிப் பேரானந்தம் பேறத் திருவுளம்பற்றினார்கள். அத் திருக்குறிப்பு திருவுளத்தில் தோன்றிய நாளிலிருந்து கயிலைத்திருமுறைப் பாராயணம் நாள் தோறும் நடைபெறுவதாயிற்று. நாவுக்கரசர் இப்பூதவுடலோடு சேன்று கண்டன்றிமீளேன் என்றுகோண்ட அதே உறுதி இத்திருவுளத்திலும் வளர்ந்தது. கயிலை நாயகனே இமயப்பெருவரையில் எழுந்தருளி உள்ள உன்திருக்கோலத்தை இப்பொழுதே காண அருள் செய், தோலைவில் உள்ள அங்கே இப்பொழுதே சேன்று காணமுடியவில்லையே. அப்பர் பெருமான் கண்ட ஐயாற்றிலாவது சேன்று அடிகள் கண்ட காட்சியை காணுதல் வேண்டும், பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனைகளும் செய்து மகிழவேண்டும். ஆவன செய்க. என்ற உத்தரவு பிறந்தது. 8-6-59 சோமவாரத்தன்று திருமுறைப் பாராயணத்துடன் ஏகதின லட்சார்ச்சனை ஐயாறப்பருக்கும் அறம்வளர்த்த நாயகிக்கும் செய்யவும், ஆட்கோண்டார் தேன்கயிலை வடகயிலை முதலிய சந்நிதிகளிலும் ஆயிரம் நாமம் சோல்லி அர்ச்சனைகளும் செய்யப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளித் தரிசனம் செய்தார்கள். ஊர்மக்களும் வந்து வணங்கிப் பேரானந்தமடைந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் அவாமேலீட்டின் அளவுக்குச் சிறப்பாக அமையவில்லை போலும். அடுத்த கிழமை 15—6—59 சோமவாரத்தன்றும் விடியல் திருமுறைப் பாராயணம் அகண்ட பாராயணமாகத் தோடங்கப் பேற்றது. ஏகதின லட்சார்ச்சனைகளும் தோடங்கப் பேற்றன.

தென்கயிலேயில் தொடங்கின அர்ச்சனை அன்றிரவு 10 மணிக்கு முடிவுற்றது. அறம் வளர்த்த நாயகி சந்தனக்காப்பிடப் பெற்ருள். ஆயிரக்கணக்கில் அன்பர்கள் கூடினர். வணங்கிப் பேரா இன்ப வாரிதியில் மூழ்கினர். பிரசாதங்கள் எல்லோரும் பெற்றனர். ஐயாற்றுப் பெருமானுக்கு அவ்வூர்ப் பெருமகனுர் .... தங்கக்கொடிமரம் செய்யக் காணிக்கை செலுத் தினுர். கயிலேத் திருமுறை அச்சிட்டு வழங்கப்பெற்றது. 19-6-59 வெள்ளிக்கிழமை விடியலில் கைலே யாத்திரையை மேற்கொண்டு எழுந்தருளினுர்கள். வழியில் ஸ்ரீ காசியில் சென்று கங்கையாடி கேதாரநாதர், விஸ்வநாதர் வணங்கி வழிபட்டு மேலே செல்லத்திருவுளம்பற்றினுர்கள். ஸ்ரீ காசி செல்லும் பொழுது சிவாசாரியார்கள், திருமுறை ஓதுவார் முதலியோரையும் உடனழைத்துச் சென்று ஸ்ரீ விஸ்வேஸ்வரனுக்கும், ஸ்ரீ கேதா ரேஸ்வரருக்கும் ஆகமவழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. சிறப்பாகப் பால் அபிஷேகம் நடைபெற்றது. கங்கையில் 64 கட்டம் தரி சனம் நடைபெற்றது. பிரயாகையில் கங்கை எடுத்துவரப்பட்டது. ஸ்ரீ காசியில் நல்லமுறையில் பிரார்த்தனைகள் செய்துகொண்டு அவ்விடம்விட்டு 28-6-59 காலேயில் நைங்கிடாலுக்கு எழுந் தருளினுர்கள். வழியெல்லாம் கைலேப்பதிகப் பாராயணம். பேச் செல்லாம் கைலேமலேயைப்பற்றியும் சமயாசாரியர்களே அப்பரும் சுந்தரரும் கைலே சென்ற சிறப்பும் திருஞானசம்பந்தர் சென்று காணுதேகண்டு பாடிய சிறப்பும் பற்றியே. 29-6-59 சோமவாரத் தன்று நைங்கிட்டால்வந்து சேர்ந்தார்கள். இங்கு கைலாச க்ஷேத் திரம் ஸ்ரீ கீதாசத்சங்கத்தின் தலேவர் ஸ்ரீஜத் சுவாமி வித்யானந்த சரஸ்வதி அவர்கள் வரவேற்ருர்கள். சுவாமிகள் பலமொழிகற்ற பெரியவர். சமயஞானமும் கைலேத்தவமும் உடைய அடியவர். சாந்த சொரூபம் உடையவர். இனிய பேச்சும் எப்போதும் சிரித்த முகமும் உடையவர். பூர்வாஸ்ரமத்தில் மைசூர் ஷிமோகாவில் பிறந்தவர்கள். இதுவரை 20 முறைகளுக்குமேல் கைலேக்குச் சென்று வந்தவர்கள். பதரி ஆலய நிர்வாகம்போன்ற பல சமய சம்பந்தமான ஸ்தாபனப் பொறுப்புமுடையவர்கள். பெருஞ் செல்வாக்குப் படைத்தவர்கள். திபேத்திய மொழி பயின்று அவர்கள் மொழியான பாலியிலிருந்து பல நூல்களே வடமொழி யிலும்ஹிந்தியிலும் மொழிபெயர்த்து எழுதிய சிறப்புடையவர்கள். அவர்கள் ஆஸ்ரமத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆண்களும் பெண்களுமாகப் பக்தசீலர்கள் பலர் கூடியிருந்து வணங்கி வரவேற்ருர்கள்.

மறுநாள் பனிமலைக் காட்சி காணச்சென்றார்கள். அங்கிருந்து கேதார சிகரம், மகாபாரதத்தில் பீமன் கைலை செல்லும்வழியில் ஹநுமானுக்கும் பீமனுக்கும் சகோதரர்கள் என்பது தெரியாமலே போர் நிகழ்ந்ததாகச் சொல்லியிருக்கும் நிகழ்ச்சியைக் குறிக்கும் பந்தர்கண்டு சிகரம், நந்தாதேவி, சௌகாம்யர், கிருஷ்ணர், பஞ்சபாண்டவர்கள் வழிபட்ட பஞ்சஆலி என்ற (ஐந்து லிங்க வடிவில் அமைந்த) மலைச்சிகரங்கள் முதலியனகண்டு வழிபட்டு கடவுட்படைப்பின் அற்புதங்களைப்பார்த்து வியந்து நின்றார்கள். இப்பகுதி குமாவூன் (Kumaun) அதாவது கூர்மாவதாரம் என்றுரைக்கப்படுகிறது. திருமால் கூர்மாவதாரம் எடுத்து உலகைக் காத்த அற்புதம் நிகழ்ந்த பகுதியாகக் கருதப்படுகிறது. உலக உற்பத்தியில் கூர்மம் மிகப் பழமை வாய்ந்தது என்று ஆராய்ச்சி யாளர்கள் கூறுவர்.

இந்தத் தலம் (நைந்நிடால்) நயனிதேவியின் பெயரால் அமைந்தது. தேவி ஒரு பெரிய ஏரியின்கரையில் எழுந்தருளி அருள் வழங்குகிறாள். ஏரி ஊரின் நடுவில் அமைந்து ஊருக்கு அழகு செய்கிறது. ஏரியைச் சுற்றிலும் மலை. மலை உச்சி வரை வீடுகள். ஏரியின் மறுகரையில் பாஷாணதேவியின் குகைக்கோவில். ஊர் தல்லித்தால் (Tallital), நயனித்தால் (Nainital), மல்லித்தால் (Mallital) என்ற மூன்று பகுப்பினை உடையது. தல்லித்தால் கடல்மட்டத்திலிருந்து 6300′, நயனித் தால் 6500′, மல்லித்தால் 6750′. தேவியின் அருள்பெற்ற இந்த நகரம் உத்தரப்பிரதேச அரசாங்கத்தாரின் கோடை வாசஸ்தானம். மே, ஜூன் மாதங்களில் அரசாங்க நிர்வாகம் இங்கிருந்தே நடைபெறுகிறது. ராஜ்யபாலர் (கவர்னர்) இங்கே வந்து தங்குகிறார்கள். இப்பொழுது கவர்னராக உள்ளவர் ஒரு சென்னைவாசி. உயர்திரு. V. V. கிரி என்னும் பெயரினர். மிக நல்ல பண்புடையவர். அவருக்கு உதவியாளராக (Add. Personal Secretary) ஸ்ரீ வாலயானந்த நாயனுரும் ஸ்ரீ நீலகண்டன் என்பவரும் உடன்வந்திருக்கிறார்கள். இவ்விருவரும் கவர்னரவர்கள் தனக்கு உதவிக்கென்றே அழைத்துவந்தவர்கள். ஆதீனத்தில் ஈடுபாடும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தினிடத்தில் பக்தி யும் தமிழர் இனப்பற்றும் மிகுதியாக உடையவர்கள். திரு. நாயனு ரவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் கைலை யாத்திரை செல்லும் செய்தி அறிந்ததிலிருந்து கீதாசத்சங்கத்து சுவாமிகளுக்கும் சொல்லி அரசாங்க உதவியாகச் செய்யக்கூடியவற்றையும்



உத்தரப்பிரதேச கவர்னர் மாளிகையில்

நைனிடால் ராஜ்பவனத்தில்

நைனிடால் ராஜ்பவனத்தில் கவர்னர் ஸ்ரீ V. V. கிரியுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

நைநிடால் கீதா சத் சங்கத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துக்கு உபசரிப்பு

செய்துவருகிறார்கள். நைங்கிடாலுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளியானதும் வந்து தரிசித்தார்கள். 1—7—59 அன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் கைலை செல்லுவதை ஒட்டி ஒரு வழியனுப்பு உபசாரம் கீதாசத் சங்கத்தாரால் நடத்தப் பெற்றது. ஸ்ரீஜத் வித்யானந்தசரஸ்வதி சுவாமிகள் உரிய முறையில் தருமையாதீனத்தின் சிறப்பையும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் சீரியகுண உதாரங்களையும் எடுத்து உரைத் தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் ஆசி மொழிந்தார்கள். கைலை யாத்திரை செல்லுவோருக்கு வழியில் வசதியான ஏற்பாடுகள் செய்துகொடுக்க ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. அதில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆதரவாளராக அமைந்து விளங்கத் திருவுளம்பற்றினார்கள். 2—7—59 ராஜ்ய பாலர் ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானமவர்களை தமது மாளிகைக்குஅழைத் திருந்தார்கள். அதன்படியே காலை 8 மணிக்கு அவர்களுடைய காரையும் அனுப்பினார்கள். இவ்விதமாக அழைத்துச்சென்று உரிய மரியாதைகளோடு வரவேற்றார்கள். கவர்னர் தம்பதிகள் தங்கள் குடும்பத்தாரோடும் மற்றைய பரிவாரங்களோடும் வந்து வணங்கி ஆசிபெற்றார்கள். அங்கும் கீதாசத் சங்கத்து சுவாமிகள் ஆதீனத்தின் பெருமை கைலைச் செலவு முதலியனகுறித்து எடுத்துரைத்தார்கள். குருவாரம் ஆகவே மோனத்தவமிருக்கும் மகாசந்நிதானத்தின் ஆசியை எழுத்துமூலமாகத் தெரிவிக்கப் பட்டது. எல்லோருக்கும் மகிழ்ச்சி பெருக ஆசி வழங்கித் திரும்பவும் விடுதிக்கு எழுந்தருளினார்கள். 3—7—59 வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு கைலை செல்லும் வழியில் முதல் பகுதி உந்தூர்திப் பிரயாணம் தொடங்குகிறது. கார்கோட் என்னுமிடம் வரை உந்தூர்தி செல்லும். வழியில் பாகேஷ்வர் சோமேஷ்வர் ஜோகேஷ்வார் (தாருகாவனம் - துவாதச ஜோதிர் லிங்கங்களுள் ஒன்று என்று வழங்கப்படுவது) நார்திதேவி (தேவி வடிவில் அமைந்த திருமலை) முதலியவற்றைத் தரிசித் துக்கொண்டு மிலம் (Milem) வழியாகச் செல்லத்திட்டம்.

சிவநெறி வாழ்க! திருவடி வாழ்க!

அதுவே துணை.

தால் - ஏரி. கோட் - கோட்டை.

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

(மலர் 18. இதழ் 7. பக்கம் 457 இன் தொடர்ச்சி)

மிஞிறு

இதுவும் மலர்களில் தேன் அருந்தும் இயல்பினதேயாம். இதன் உடம்பின் மேற்புரத்தில் வரி வரியாகக் கோடுகள் காணப் படுவதால் இது 'வரிஞிமிறு' எனப்படுகின்றது. 'வரிஞிமிறு இமிர்ந்தார்ப்ப' (கலி - 127) என்பதுகாண்க. இது யானையின் மதத்தை யுண்ண அதன் கன்னங்களில் மோய்த்தல் உண்டு.

> "மிஞிறு மூசுகவுள சிறுகண் யானை" (அகநா - 159)

என்றல் காண்க. இம் மிஞிறு விளாம்பழத்தின் நறுமணத்துள்ள நசையால் அப்பழத்தின்மேல் மோய்த்துக் கொள்வதுண்டு. அப் பழம் வாளரத்தால் அறுக்கமுடியாத மேல் மூடியை யுடையதாக இருத்தலின் அம்மிஞிறு மோய்ப்பினும் சுவைகுன்றாமல் இருக்கு மாம். இதனை

> "மிஞிறு மூசவுந் தீஞ்சுவை திரியாது
> அரம் போழ்கல்லா மரம்படு தீங்கனி" (பதிற்றுப்-60)

என்று கூறியுள்ளமையால் அறியலாம். இது ஞிமிறு எனப்போலி யாகக் கூறப்படுவதுமுண்டு. வண்டு,தும்பி,சுரும்பு,தேன்,மிஞிறு என்றுவகுத்துக் கூறப்பட்ட இவையாவும் பாகுபாடு யாதுமின்றி வண்டு என்றே பிற்காலத்து வழங்கப்படுதல் அறிந்ததே.

சிள்வண்டு

இது நூல்களில் 'சிள்வீடு' எனவும் 'சிதழ்' எனவும் வழங் கப்படுகின்றது. காட்டின் செறிவை விளக்குமிடங்களில் எல்லாம் இச் சிள்வண்டு கறங்குதலைக் கூறல் காணலாம்.

" கானேந்தும், கறங்கிசைச் சிதடி பொரியரைப் பொருந்திய
சிறியிலை வேலம் பெரிய தோன்றும்" (பதிற்று-58)

என்புழிச்சிதடி ஒலிக்கின்ற இசையையுடையது என்பதும், வேல மரத்தின் பொருக்கரையில் பொருந்தியிருக்கும் இயல்பினது என்பதும் விளக்கப்படுதல் காணலாம். "சிள்வீடு கறங்கும் சிறியிலை வேலத்து" (அகநா-89) எனச் சிள்வண்டு வேலமரத்தில் உள்ளதாகவே கூறியிருத்தல் காண்க.

மின்மினி

இதுவும் பறக்கும் இயல்புடைமையின் பறவையினத்தில் சேர்க்கப்படவேண்டியதேயாம். இரவில் இது பறக்கும் போதும் செடிகளில் அமர்ந்து சிறகை விரிக்கும் போதும் மின்ஒளியைத் தோற்றுவித்தலில் 'மின்மினி' எனக்காரணப் பெயரால் வழங்கப் படுகின்றது. செறிந்த இருளில் இம்மின்மினிகள் பலவாய்ச் செடிகளில் பலவிடங்களிலும் அமர்ந்து ஒளிவிடும் தன்மை பார்க்கப் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். சிறிய மின்விளக்குகள் ஒளி வீசுதல் போன்று தோன்றும். பாலைவனத்தில் சிறு பரற்கற்கள் ஒளியுடன் விளங்குவதற்கு உவமையாக இம் மின் மினி கூறப்படுகிறது.

" நிலம்படு மின்மினி போலப் பலவுடன்
இலங்கு பர லிமைக்கும்" (அகநா - 67)

என்பது காண்க. தரையில் காணப்படும் பரற்கற்களுக்கு உவமையாக வேண்டி 'நிலம் படு மின்மினி' கூறினர். இம் மின்மினிகள் புற்றில் மொய்த்துக் கொண்டு இருத்தலும் உண்டு. ஒரு கரடி புற்றுஞ்சோற்றை யுண்ண விரும்பிப் புற்றினைக் கையால் கிண்டுகிறது. புற்றில் மொய்த்துக்கொண்டிருந்த மின்மினிகள் கரடியின் கைப்பட்டவுடன் எழுந்து பறக்கின்றன. அவைபறக்கும்தோற்றம் கொல்லன் உலேக்களத்தில் இரும்பைக் காய்த்து அடிக்குங்காலத்தில் பிதிர்ந்து எழுகின்ற காய்ந்த இரும்பின் பிதிர்வு போன்று காணப்படுகின்றதாம. இவ்வாறு எருமை வெளியனார் மகனார் கடலனார் கற்பனைசெய்கின்றார்.

" மின்மினி மொய்த்த முரவுவாய்ப் புற்றம்
பொன்னெறி பிதிரிற்சுடர வாங்கு

குரும்பி கேண்டும் பெருங்கை யேற்றை
இரும்புசெய் கொல்லெனத் தோன்றும்'' (அகநா - 72)

என்றது காண்க. முரவுவாய்ப்புற்றம் - சிதைந்த வாயினையுடைய புற்று. கரும்பொன் என்னும் வழக்குப்பற்றி இரும்பினைப் 'பொன்' என்றார். குரும்பி புற்றுஞ்சோறு. பெருங்கை யேற்றை என்றது ஆண்கரடியை. கொல் - கொல்லன். கரடி கொல்லனைப் போலத்தோன்றுகின்றது என்க. கடியலூர் உருத்திரங்கண்ணனார் இம்மின்மினிக்குச் 'சுடர்க்கடைப்பறவை'(பெரும்பாண்-305) என்ற அழகான பெயரைக் கொடுத்துள்ளார்.

ஈயல்

இது முதலில் சிறு சிதலைகளாக இருந்து பின்பு பெரிய தாய்ச் சிறகு முளைக்கப்பெற்றுப் பறந்து விரைவில் அழிகின்ற இயல்பினது. ஈசல் என்றும் இதனைக்கூறுவர். இதன் இயல்பை.

" நுண் பல் சிதலை யரிதுமுயன் றெடுத்த
செம்புற் றியல் போல
ஒரு பகல் வாழ்க்கைக் குலமரு வோரே" (புறநா-51)

என்பதால் அறியலாம். "பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியின் அருளைப் பெறாது பகைத்தவர்கள் புற்றில் தோன்றும் ஈசல் போல ஒருநாள் வாழ்க்கைக்குத் துன்புறுவோரே ஆவர்'' என அப்பாண்டியன் வீரத்தை ஐயூர் முடவனார் அழகுறச் சிறப்பித்தல் காண்க. பாண்டியனோடு பகைப்பின் பகைத்தவர் ஒருநாட் போரிலேயே அவனால் அழிந்துபடுவர் என்பதற்குவமையாக இவ்வீசலைக் கூறியிருத்தலின் இது ஒரு பகல் வாழ்ந்து விரைந்து அழியும் இயல்பினது என்பது அறியலாம்.

இந்த ஈசலைச் சிலர் உணவுப் பொருளாகக்கொள்வதும் உண்டு. இனிய மோரோடு ஈசலைச் சேர்த்துப் புளிக்கறிச் சமைப்பதுண்டாம்.

" செம்புற் றீயலின் இன்னளைப் புளித்து" (புறநா - 119)

என்பது காண்க. பாரிமாய்ந்தபின் அவன் பறம்பு நாட்டு வளத்தை நினைந்து பாடுகின்ற கபிலர் இங்ஙனம் கூறுகின்றார். "செம்புற்றின் கண் ஈயலை இனிய மோரோடு கூட்டி அடப்பட்ட புளிங்கறியை யுடைத்து'' என்ற பழைய உரையும் காண்க.

புளிஞ்சோற்றிலும் இந்த ஈயலைக் கலந்து சமைப்பது வழக்கமாம். செம்மறியாட்டின் பழுப்பு நிறமுள்ள தயிரில் வரகு அரிசியோடு ஈயலையும் பெய்து சமைத்த இனிய புளிச்சோறு பற்றி நன்பலூர்ச் சிறுமேதாவியார் என்ற புலவர் கூறியிருக்கின்றார்.

"சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர்
இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியோடு
கார்வாய்த் தொழிந்த ஈர்வாய்ப் புற்றத்து
ஈயல்பெய்தட்ட இன்புளி வெஞ்சோறு" (அகநா - 394)

என்றது காண்க. "சிறிய தலையையுடைய செம்மறியாட்டின் பழுப்பு நிறமுடையதாய்க் கட்டியாகத் தோய்ந்த தயிரில் புதிய புலத்தில் விளைந்த வரகினை அரைத்துத் தீட்டிய மாட்சிமையுடைய வரகரிசியோடு, மேகம் மழைபெய்து நீங்கினமையால் ஈரமுள்ள வாயையுடைய புற்றிலிருந்து எழுந்த ஈயலைப்பெய்து சமைத்த இனிய புளிச்சுவையுடைய விரும்பத்தக்க சோறு" என்பது பொருள். இதுகாறும் யானை முதல் குரங்கு ஈறுக இருபத்தைந்து வகையான விலங்குகளைப் பற்றியும் மயில் முதல் ஈயல் ஈறுக நாற்பத்தோரு பறவை இனங்களைப்பற்றியும் பழந்தமிழ் நூல்களில் பகர்ந்துள்ளவற்றைப் பார்த்தோம். இனி ஊர்வன முதலியவற்றைப்பற்றி அந்நூல்களிற் காணப்படுவனவற்றைக் காண்போம்.

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபரசுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

சிவாகமப்பரிபாலனம்

திரு. கிருஷ்ண முதலியார் B. A., அவர்கள்

சிவநெறிக்குத் திருக்கோயில் ஆணிவேர் போன்றது. திருக்கோயில் வழிபாடு சரியையாளருக்கு மட்டுமின்றி கிரியையாளர், யோகிகள், ஞானிகள் எல்லோருக்குமே அவசியம் என்று சாத்திரம் கூறுகின்றது. மக்கள் எல்லோரும் திருக்கோயில் வழிபாடு செய்யவேண்டும் என்று சமயாசாரிய மூர்த்திகள் அறிவுறுத்தியதோடு தாங்களும் ஆங்காங்குச் சென்று வழிபட்டனர். திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் சீகாழிக் கோயிலில் உணர்வரிய மெய்ஞ்ஞானத்தை அருளினன். அதே மாதிரி அப்பருக்குத் திருவதிகைக்கோயிலிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக்குத் திருவெண்ணெய்நல்லூர் திருவருட்டுறைக் கோயிலிலும், மணிவாசகப் பெருமானுக்குத் திருப்பெருந்துறையிலும் சிவஞானத்தை உணர்த்தினன். நால்வர் பெருமக்கள் பேரின்பநிலை எய்தியதும் திருக்கோயிலில்தான். ஞானசம்பந்தர் திருநல்லூர்ப் பெருமணத்திலும், அப்பர் திருப்புகலூரிலும், சுந்தரர் திருவஞ்சைக்களத்திலும் மணிவாசகர் சிதம்பரத்திலும் பேரின்ப நிலை எய்தினர். சமய குரவர்களுக்கு இறைவன்தானே ஞானோபதேசம் செய்ததும் அவர்களுக்குப் பேரின்பநிலை அருளியதும் திருக்கோயிலில் என்றால் திருக்கோயிலின் பெருமை அளவிடற்பாலதன்று.

இவ்வாறு திருக்கோயிலில் திருமேனி கொண்டெழுந்தருளியிருந்து ஆட்பாலவர்க்கு அளவிலாவண்ணம் அருள் புரியும் இறைவனை மக்கள் பூசித்து உய்யும் பொருட்டு இறைவன்தானே சிவாகமங்களை அருளிச்செய்தான். "உயிர்கள் யாவையும் ஈன்ற எம்பிராட்டி" யாகிய காமாட்சியம்மை "இங்கு நாதநீ மொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உனை அருச்சனைபுரியப் பொங்குகின்றது என் ஆசை" என்று "மெய்ப்பூசை எய்த ஆகம விதியெலாம் செய்தாள்" என்ற சேக்கிழார் பெருமானின் திருவாக்கினால் ஆகம விதிப்படி செய்யாத பூசை மெய்ப் பூசையாகாது என்று உணரக்கிடக்கின்றது சிவபூசை தவிர்த்து மற்ற புண்ணியம் எல்லாம் சிவபூசையாகிற புண்ணியத்தில்

கோடியில் ஒரு பங்குக்குச் சமானமாகாது என்பது ஆகமத்தில் கூறப்பட்ட உண்மை. சிவபூசையாகிற புண்ணியத்தையும் புண்ணியம் என்று சொல்லி மற்ற புண்ணியங்களையும் புண்ணியம் என்று சொல்லத்தகாது என்ற காரணத்தால் பூவும் நீரும் கொண்டு செய்யும் சிவபூசையை புண்ணியம் என்ற சொல்லினாலேயே திருமூலர் குறிப்பித்தார்.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவு கின்றாரே".

திருக்கோயில்களில் தினந்தோறும் எந்த எந்தக் காலத்தில் பூசை செய்யவேண்டும் என்று ஆகமநியதி உண்டு. அப்பர் பெருமானும் திருஞானசம்பந்தசுவாமிகளும் பூசைக் காலங்கள் அனைத்திலும் ஆண்டவனைத் தவறாமல் வழிபட்டு வந்தனர்.

"அங்கணமர் வா ரானா ரடியிணைக் கீழ்த்
தங்கிய காதலினால் காலங் கடப்பாமே
போங்கு புகழ்வா கீசருங் கூடப் போற்றிசைத்தே
எங்குமிடர் தீர்ப்பாரின் புற்றுறை கின்றார்"

"நீலமாவிடந்திரு மிடற்றடக்கியநி மலரை நேரெய்துங்
காலமான வையனைத்திலும்பணிந்துடன்கலந்தவன் பர்களோடுஞ்
சாலநாள் களங்குறைபவர் தையலாடமுவிடக் குழைகம்பர்
கோலமார் தரக்கும்பிடுமாசை கொண்டேழுங் குறிப்பினராானார்".

இத்துணைப் பயனும் பெருமையும் உடையது ஆகம விதிப்படி செய்யப்படும் பூசை.

சிவபெருமான் அருளிச்செய்த சிவாகமங்கள் இருபத் தெட்டு. இந்த மூலாகமங்களுக்கு உபாகமங்கள் இருநூற்றெட்டு. இவ்வாகமங்களை அனுசரித்து வகுக்கப்பட்ட பூசை முறைக்குப் பத்ததி என்று பெயர். பத்ததிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மூலாகமத்தை முக்கியமாகக் கொண்டு அவ்வாகமத்தில் கூறப் படாத விதிகளை மற்ற ஆகமங்களையும் ஆதாரமாகக் கொண்டு கூறப்பட்டவையாகும். பத்ததிக்காரருள் முக்கியமானவர் பதினெண்மர்.

இத்துணை ஆகமங்களில் மிகச்சில ஆகமங்களே அச்சிடப் பட்டுள்ளன. ஒன்றிரண்டு பத்ததிகளும் அச்சிடப்பட்டு இருக்கின்றன. காமிகம், காரணம், சுப்ரபேதம், குமாரதந்திரம் இந்த நான்கு ஆகமங்களும் மயிலை அழகப்ப முதலியாரவர்களால் பல ஆண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்டன. இப்போது ஒரு புத்தகமும் கிடைப்பதில்லை. நூல் நிலையங்களிலும் குறிப்பிட்ட சிலரிடமும் இருக்கும் புத்தகங்கள் இப்போதே காகிதம் மக்கிப் போய் விட்டதால் இன்னும் சில ஆண்டுகளில் அறவே கெட்டுப் போய்விடும். ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டபடியே இருக்கும் ஆகமங்களின் நிலைமை இன்னும் மோசம். சிவாகமங்களில் பற்றுள்ள சிலரே முக்கியமாக சிவாசாரியார்களே இந்த ஓலைச்சுவடிகளை வேண்டும்போது புதுப்பித்து எழுதிப் பாதுகாத்து வந்தனர். சிவாசாரியார்களின் பொருளாதார நிலைமை வரவரக் கெட்டுப்போய்விட்டதால் அவர்களுக்கு ஆகமப் பாதுகாப்பில் இருந்த ஊக்கம் மிகக் குறைந்தவிட்டது. தற்சமயம் சில ஆகமங்கள்தான் கிடைக்கும் என்றும் மற்றும் சில ஆகமங்களில் ஒவ்வொரு பாகம் கிடைக்கலாம் என்றும் விசாரித்த அளவில் தெரிகிறது. சிவாகமங்களை அச்சிட முயற்சி செய்யாமல் இன்னும் சைவ உலகம் வாளா இருக்குமானால் ஆண்டுகள் கழியக் கழிய ஒவ்வொரு சிவாகமமாய்க் கெட்டுப் போய்க் கடைசியாக ஒரு சிவாகமும் கூடக் கிடைக்காமல் போய் விடும். தனி நபர்கள் சிவாகம் சிலவற்றை எழுதிவைத்துப் பாதுகாத்து வந்தாலும் அவற்றில் பிழை மலிந்திருக்கும். இப் போதிருக்கும் பிரதிகளிலேயே பல பிழைகள் இருக்கும். ஆகமங்கள் கிடைக்காமல் போய்விட்டால் அல்லது கிடைக்கும் ஆகமங்களில் பிழை மலிந்திருந்தால் ஆன்மார்த்தமாகவும் பரார்த்தமாகவும் செய்யப்படும் பூசை ஆகம பூசை என்று பெயரளவில் சொல்லிக்கொள்ளலாமே தவிர "மெய்ப்பூசை" ஆகாது.

சில நாட்களுக்கு முன் சங்கராசாரிய சுவாமிகள் சென்னையில் பேசியபோது வேதங்களை நன்கு பயின்று ஒரு சிலராவது வேதநெறியில் நிற்காவிட்டால் இந்நாட்டிற்கேயன்றி உலகத்திற்கும் ஆபத்தாய் முடியும் என்றார்கள். ஆனால் பாடப் புத்தகத்தை வாசிக்காமல் அப்புத்தகத்திற்கு எழுதப்பட்ட விளக்கத்தை மாத்திரம் வாசிக்கும் மூடமாணவர்களைப்போன்று

ஆகமப் பாடசாலையில் வாசிக்கும் மாணவர்கள் ஆகமத்தைக் கண்ணால் கூடப் பார்க்காமல் நித்யநைமித்திகபூசை முறையை மாத்திரம் கற்றுக்கொள்கிறார்கள். வேதத்தைப் பொது நூலாக உலகர்க்கும் ஆகமத்தைச் சிறப்பு நூலாகச் சத்திநிபாதர்க்கும் இறைவன் அருளிச் செய்தான் என்பது சைவ சித்தாந்த சாத்திரம் கண்ட உண்மை. ''வேதங்கள் ஐயா என'' அவற்றிற் கப்பாற்பட்ட சிவபெருமான் ''ஆகமமாகி நின்று அண்ணிப் பான்'' என்ற மணிவாசகர் வாக்கும் இவ்வுண்மையை உணர்த்துகின்றது. ஆகம விதிப்படி செய்யப்படும் பூசை தப்பினால் விளையக்கூடிய தீமையைச் சிவாகமப் பொருளை சிவனருளால் உணர்த்திய திருமூலர் முன்னரே அறிவுறுத்தி இருக்கின்றார்.

''ஆற்றரு நோய் மிக்(கு) அவனிமழையின்றி
போற்றருமன் னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக்கோயில் களானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற்றானே''

''தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன்'' ஆகையால் உலக மக்களின் நன்மையைக் கருதி சிவாலயங்களில் செய்யப்படும் பூசை என்றென்றும் செவ்வனே நடைபெற்றுவரும் பொருட்டு கிடைக்கக் கூடிய சிவாகமங்களை உடனடியாகச் சேகரித்து அவற்றில் உள்ள பிழைகளை நீக்கி அச்சிடவேண்டும். அப்படி அச்சிடச் சென்னை அறநிலைய ஆணையாளர் ஏற்பாடு செய்து வருகிறார். ஆனால் இவ்வரும் பெரும்பணியில் பலரும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற குறிக்கோளுடையவர்கள் ஆவன செய்வார்கள். சிவநேயச் செல்வர்கள் அனைவரும் ஆங்காங்கு கிடைக்கக்கூடிய சிவாகம ஓலைச் சுவடிகளைச் சேகரித்துதவவேண்டும்.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

உயிரினை யோப்பவ ருத்தம நட்பின ரோப்பரிய
அயிரினை யோப்பவ ரன்னங் கொடுப்பவ ராய்பருவப்
பயிரினை யோப்பவர் நல்லறச் செல்வர் பறித்திடவீழ்
மயிரினை யோப்பவர் மானமில் லாதவர் மான்விழியே. 56

மெய்ஞ்ஞானச் செல்வர்கள்

திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்
கருப்பக்கிளர்.

முன்னுரை

மெய்ஞ்ஞானமாவது உண்மையறிவு, உலகப்பொருள்களைப் பற்றியறியும் அறிவெல்லாம் பொதுவான அறிவு எனப்பெறும். கடவுளைப்பற்றிய அறிவுதான் இம்மை மறுமை இரண்டின் நலங்களையும் ஒருங்கே தரவல்லது. ஆகவே அவ்வறிவு மெய்யறிவு என்று ஆன்றோர்களால் கூறப்பெற்றது. பொது வான அறிவினால் இவ்வுலக நலங்களை ஓரளவு பெறலாம். ஆனால் மறுமை நலங்களையோ வீடுபேற்றையோ அடைய முடியாது. இதனைக் கருதியே பெரியோர்கள்,

> " ஐயறி வறிந்தவை அடங்கினவ ரேனும்
> மெய்யறிவி லாதவர்கள் வீட்துபெ.றுரே "

என்று உரைத்தனர். மெய்யறிவு பெற்றவர்கள் உலகியலறிவு மட்டும் பெற்றவர்களை விடப் பன்மடங்கு பெருமையிற் சிறந் தவர்களாக விளங்குகின்றனர். மெய்யறிவு முதிருமாயின் தெய்வத்திருவருள் கைவரும். தெய்வத் திருவருள் கைவரு மாயின் செயற்கருஞ் செயல்களை யெல்லாஞ் செய்யுந் திண் ணிய பேராற்றலும் உண்டாகும்.

செயற்கருஞ் செயல்களைச் செய்யும் மெய்ஞ்ஞானச்செல் வர்கள் உலகமக்களால் தெய்வத்தைப் போன்றே போற்றப் பெறுகின்றனர். மெய்ஞ்ஞானச் செல்வர்கள் கடவுளோடு தொடர்புகொள்வது மிக எளிமையாக உள்ளது. கடவுளின் தொடர்பு எளிதாக இருக்குமாயின் அவர்கட்கு அருமையான தொன்றுமில்லை.

உலகந்தோன்றிய நாள் தொடங்கி எத்தனையோ பேரறி வாளர்கள் உண்மையறிவு கைவரப்பெற்றவர்களாய்ச் செயற் கருஞ் செயல்களைப் புரிந்து உலகிலே சீர்த்திபெற்றுத் திகழ்ந்து வீடு பேற்றை அடைந்தனர். இத்தகைய மெய்ஞ்ஞானச் செல்வர்களின் தொகை எண்ணில் அடங்கா. இவர்களுடைய

செயற்கருஞ் செயல்களையும் வரலாறுகளையும் நாம் உணர்ந்து கொள்வது நாமுஞ் சிறப்படைவதற்கு ஏதுவாகும். ஆகவே மெய்ஞ்ஞானச் செல்வர்களுடைய வரலாறுகளையும் செயற்கருஞ் செயல்களையும் ஒருங்கு தொகுத்து வெளியிட எண்ணியே மெய்ஞ்ஞானச் செல்வர்கள் என்னும் பெயரோடு எழுதப் பெறுகிறது.

செயற்கருஞ் செயல்களைப் புரிந்த பெரியோர்கள் அனை வருடைய வரலாறுகளுஞ் சுருக்கமாகவும் விளக்கமாவும் எழுதப்பெறும். முதற்கண் ஆனைமுகக் கடவுள் வணக்க மாகவும் இரண்டாவது ஆறுமுகக் கடவுள் வணக்கமாகவும் ஔவையார், முருகம்மையார் ஆகியோருடைய வரலாறுகளைச் சுருக்கமாகக் கூறிப் பின்னர் மற்றையோருடைய வரலாறுகள் எழுதப்பெறும்.

க. ஔவையார்

ஔவையாருடைய இளம்பருவ வரலாறு கல்வி கற்ற செய்தி முதலியன விளங்கவில்லை. உலகில் வழங்கும் செய்தி களும் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. ஔவையார் எவ் வாறு சிறந்த புலமை பெற்று மெய்யறிவடைந்து மெய்ஞ் ஞானச் செல்வராக விளங்கினர் என்பது மட்டுந் தேற்றம். ஔவையார் மெய்யறிவு நூல்களிலும் வல்லவர் என்பது அவர் இயற்றிய ஔவைக்குறள், விநாயகர் அகவல் முதலிய நூல்களால் நன்கு உணரப்பெறும்.

சிலர் ஔவையாரிடஞ் சென்று 'திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களால் கூறிவிட்டாரே; அவருடைய ஆற்றலே ஆற்றல்' என்று பாராட்டிப் பேச ஔவையார், "இதற்கு ஆயிரத்து முந்நூற்று முப்பது பாடல் வேண்டுமா? வீட்டை யுஞ்சேர்த்து ஒரு பாடலில் நான் முடிப்பேன்" என்றுசொல்லி,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித் - தாதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்னும் வெண்பாவையும் இயற்றினர் என்னுஞ் செய்தியும் அறியப்பெறுகிறது.

நூல்களைக் கற்றவர்கள் கடவுளைப் போற்ருர்களாயின் அறி விஞல் எத்தகைய பயனும் இன்று.

" கற்றதனுல் ஆய பயனேன்கோல் வாலறிவன்
நற்ருள் தோழாஅ ரேனின் "

என்பது தேய்வப்புலவர் திருவாக்கு. கடவுள் வழிபாடு எவ் வளவுக்கு மிகுதிப்படுகிறதோ அவ்வளவுக்கு மெய்யறிவும் மிகுதிப்படும். ஔவையார் ஆனைமுகக் கடவுளைப் போற்றி வழிபட்டு அவருடைய அருளைப் பெற்ருர். ஔவையார் கூறுங் காரியங்களையுஞ் செய்வதற்கு ஆனைமுகக்கடவுள் காத்திருந்தார்.

திருக்கோவலூரிலே பாரியின் பெண்கட்குத் திருமணஞ் செய்து வைப்பதற்குத் திருமண ஓலை எழுத எண்ணிய ஔவையார் திருமண ஓலை எழுதுவதற்கு ஆனை முகக் கடவுளைத்தான் அழைத்தார். தாம் அழைத்தவுடன் வாரா விடின் சாபங் கோடுத்துவிடுவதாக,

" ஒருகோம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய் - பரிவுடனே
கண்ணுல வோலை கடிதேழுத வாராயேல்
தன்ஞண்மை தீர்ப்பன் சபித்து "

என்று அச்சுறுத்திப் பாடல் ஒன்றும் பாடிஞர். ஆனைமுகக் கடவுளும் ஔவையார் கட்டளைப்படியே வந்து திருமண ஓலையை எழுதிக்கோடுத்து விட்டுச் சென்ருர். இதனுல் மெய்ஞ்ஞானச் செல்வர்களுடைய கட்டளைக்குத் தெய்வமுங் கீழ்ப்படிகிறதென்பது பெறப்படுகின்றதன்ருே? ஔவையா ருடைய அருட்டிறங்களை அறிதலுக்கு இன்னும் பல நிகழ்ச்சிகளை அவருடைய பாடல்களிற் காணலாம்.

ஆனைமுகக் கடவுளை ஔவையார் நாள்தோறும் பூசித்து வழிபாடு செய்துவந்தார். ஆனைமுகக் கடவுளின் வழிபாடு முடிந்த பிறகே பிற அலுவல்களைப் பார்ப்பார். ஔவையாருக்கு அகவை முதிர்ந்துவிட்டது. இனிமேல் இறைவன் திருவடி நீழலை எய்தவேண்டியதுதான் எஞ்சியுள்ளது. இச்சமயத்தில் சுந்தரமூர்த்தி நாயஞரும் சேரமான் பெருமாளும் திருக்கயி லைக்குப் புறப்பட்டனர். அவர்கள் ஔவையாரையும் உடனழைத் தனர். ஔவையாரும் வருவதாகக் கூறியிருந்தார்.

திருக்கயிலேக்குப் புறப்படும் நாளன்று ஔவையார் பூசையை விரைவாகச் செய்தார். ஆனைமுகக் கடவுள் ஔவையாரைப் பார்த்து "ஔவையே! விரைந்து பதற வேண்டாம்; அவர்கட்கு முன்பு உன்னைக் கயிலேயில் சேர்க்கிறேன் வழக்கம்போலவே பூசையைச்செய்" என்று கூறினார். ஔவையாரும் வழக்கம்போல் மேதுவாகப் பூசையைச் செய்துகோண்டிருந்தார். ஔவையார் விரைந்து செல்லாமற் போகவே சுந்தரரும் சேரமான் பெருமாளும் ஔவையாரை விட்டுவிட்டே திருக்கயிலேக்குப் புறப்பட்டுச் சேன்றனர்.

ஔவையார் பூசையை முடித்து ஆனைமுகக் கடவுள்மீது அகவற்பா ஒன்றையும் பாடினார். அவ்வளவில் ஆனைமுகக் கடவுள் பேருவடிவங்கோண்டு தம்முடைய துதிக்கையினால் ஔவையாரைத் தூக்கித் திருக்கயிலேயில் வைத்துவிட்டார். யானைமீதும் குதிரைமீதுஞ் சென்ற சேரமானும் சுந்தரரும் திருக்கைலேயில் ஔவையார் எழுந்தருளி யிருத்தலேக்கண்டு மிகுந்த வியப்படைந்தனர். "எப்படி எங்களுக்கு முன்னாக இவ்விடம் வந்து சேர்ந்தீர்கள்?" என்று உசாவினர். அப்போழுது ஔவையார்,

"மதுரமோழி நல்லுமையாள் புதல்வன் மலரடியை
முதிரநினைய வல்லார்க் கரிதோ முகில்போல் முழங்கி
அதிர வருகின்ற யானையுந் தேரும் அதன்பின் சென்ற
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே"

என்னுஞ் செய்யுளைத் திருவாய் மலர்ந்தருளினார். (தோடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

My visit to the temple has given me full inspiration of Godliness.

(Sd.) M. Gopalakrishnan,
D.C.T.O. Mayuram 15-4-59.

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வாழ்வைப் புகழ்ந்துபெரு வாழ்வைத்
துறந்தமத மாயைப் பிணக்கடையனேன்
ஞாழ்வைச் சிறந்துதிரு நீறைப்
புனைந்துருகு தாளைத் திறந்தருளுவா
யூழ்வைப் பெனுங்குறையை நீமுற்
றுகந்தருளு மோமச் சடங்கிலுறைவா
யேழ்வெற் பெனும்பெரிய தாகத்
திரண்டமுலை யேழைக் கிரங்குமமுதே. 22

அமுதம் பிஞ்சிள மதியின்
சேஞ்சடை யாலுங் கோஞ்சியபோ
துமிழுஞ் சேஞ்சுட ருதயங்
கோண்டேழு முபயங் கோங்கைகண்மேற்
கமழுஞ் சந்தன மேழுகுங்
கைகோடு தழுவங் காஞ்சனியே
திமிதங் கோண்டேழு நடனஞ்
சேந்திரு வுருகுஞ் சிந்தனையே. 23

சிந்தனைக் கரியதோரு வந்தனைக்
குரியமயில் சிந்துரக் களபமுலையே
பந்தடித் திடுபோழுது நோந்துகைச்
சிறுவிரல்கள் பஞ்சவக் கணமுடியினுர்
வந்துநித் திலமுதிர நோந்திளைத்
தனைவருக மங்கையர்க் கரசியேனவே
சுந்தரக் கமலமுறு சேந்திருக்
கழல்வகுடு சுந்தரக் கலபமயிலே. 24

பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மயிலி னழகு பசிய நிலையுன்
வடிவை யெவர்கள் புகல்வரே
மணவன் முடியி லிலகு மதியை
வதன நுதல்செய் வளமையாய்
குயிலை யமுதை மழலை குதலை
யிழைய வடிவு கொளுமொழிக்
குமரி பரமி சிறுமி கிழவி
குழவி குதலை மதலையே.
யயிலை யுழையை யளியை வெகுளு
மரிவை விழிகள் பொருவுமே
யமல நயனு மரியு மறிய
வரிய சயன மவுனியே
பயிலு மடியர் மனது குறைகள்
பறிய நிலவு பதமுளே
பதிய வெனது சிறுமை தவிரும்
பரம சரித விரதியே. 25

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

விரதம் பயிலுஞ் சிறுவிதிசெய்
வேள்விக் கிறையோன் விடைகொண்டே
யரமங் கையருக் கரசேநீ
யங்நா ளரனைப் பிரிந்தன்றே
விரவும் பகலு மில்லாத
விடத்தே சிவனு மிருக்கின்று
னரவேன் பணியுங் கலைமதியுந்
தரித்தாற் குன்னை யலதுளவோ. 26

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உளமுங் கசிந்துருகி யுரையுங் குழன்றுளறி
யுடலுங் கிடந்து புரளக்
களமுங் கருங்கனிகொள் பவளந் தயங்குபுய
கணவன் கலந்த வலமே
புளகம் புரிந்தமுலை யளகம் புனைந்தமலர்
புழுகுங் கலந்து திரவே
வளவேன் டயங்களொலி தருதந் தியின்கடிது
வருமேன் றவங்க ளுளதோ. 27

*பதினோராம் திருமுறையில்

ஒரு திருப்பாட்டு

திரு. சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள்
காரைநகர், யாழ்ப்பாணம்,

பதினோராந் திருமுறையில், உள்ளத்தை அள்ளும் சங்கச் செய்யுள் நடையிலும், இலகுவில் பொருள் விளங்காத ஆழ்ந்த முறையிலும் அநேக பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றுள் கீழே குறிக்கப்படும் பாடலின் பொருள் யாதோ? என நண்பர் ஒருவர் வினவினர். அதன் பொருளை முழுவதும் விளங்கிக் கொள்ள முடியாமையால், எனக்கு உற்ற நண்பரும், மதுரைத் தமிழ்ச்சங்கம் - செந்தமிழ்க் கலாசாலை வகுப்புத் தோழரும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளராக இருந்தவரும் ஆகிய (பரகதியடைந்த) சோழவந்தானூர், உயர்திருவாளர். கந்தசாமியார் அவர்களுடன் உசாவி, ஒரு உரை எழுதி அந்த நண்பருக்குக் கொடுத்தேன். அதன் பிரதியை இப்போது திருமுறை பயில்வார்க்கு உதவுமென எண்ணி வெளியிடலானேன்.

முதல்வன் வகுத்த மதலை மாடத்(து)
இடவரை ஊன்றிய கடவுள் பாண்டில்
பள்ளிச் செம்புயல் உள்விழு(து) உறீஇப்
புத்தேள் நிவந்த முத்த மாச்சுடர்!
எறிவளி எடுப்பினும் சிறுநடுக்(கு) உறுநின்
அடிநிழல் அறியவோ? வைத்த முடிமிசை
இலங்கு வளைத்தனிப் போது விரித்த
அலங்குகதிர் ஒலியல்நீ அணிந்த(து) என்மாறே?

— இளம்பெருமானடிகள்.

கருத்துரை: பெருஞ்சுடர் வடிவினரே! பிறப்பு இறப்பாகிய கோடையால் வருந்தும் உயிர்கள் இலகுவில் அடைதற்கரிய செம்மலர் நோன்தாளாகிய தண்ணிழலை, எய்த்து இளைத்து

---

* இது சிற்சில வேறுபாட்டுடன் விசு - ஆடி தமிழ்ப் பொழிலில் (துணர். 17, மலர் 4) வந்த கட்டுரை. அப்போது எழுதிய ஆசிரியரே இப்போதும் எழுதியுள்ளார்.

அடைக்கலம் புகுந்த வெண்சுடர்க் கடவுட்கு அளியாது, திருமுடியினை ஈந்தது என்ன காரணமோ? அத்தாள் தலையினும் அளிசெய்யும் தன்மையுடையனவல்லவென்பது இத் திருவுளக்கருத்தோ? எங்களை ஆளுவதே முறைமையாக தேவரீர்! எங்கட்குத் தலையளியாது தாளளித்தலையே வேண்டுதும் என்பதாம்.

பதவுரை: முதல்வன் வகுத்த மதலை மாடத்து - தலைவனாகிய நான்முகன் பகுத்து இயற்றிய தூண்களை (ஆதாரங்களை) யுடைய மாளிகைகளையுடைய பிரமாண்டத்தின், இடவரை ஊன்றிய - பரப்பு முழுவதிலும் பதிந்த (வியாபித்த), கடவுள் பாண்டில் - தெய்வத்தன்மை அமைந்த வெள்விடையும், பள்ளி சேம்புயல் - (பாற்கடலில்) பள்ளிகொள்ளும் (யோக நித்திரை செய்யும்) செங்நிறக்கொண்டலும் ஆகிய திருமாலின், உள் - இதய தாமரைக்கண், விழுது உறீஇ - அன்பாகிய நெய் உறப் பெற்று, புத்தேள் நிவந்த - தெய்வத்தன்மையின் உயர்ந்த, எறிவளி எடுப்பினும் சிறு நடுக்கு உரு - குலவரை முதலிய பெரும் பொருள்களையும் பெயர்த்து எடுத்து எறிந்து செல்லும் வலிமை மிக்க பெருங்கால் தோன்றினும் சிறிய அசைவினையும் மேவாத, முத்த மா சுடர் - முத்தினையொத்த வெண்மையாகிய பெருஞ்சுடர் வடிவினரே! (தகராகாய விளக்கமானவரே!) நின் அடிநிழல் - தேவரீரது திருத்தாள்நிழல், அறியவோ - அடைக்கலப் பொருளாப் புகுவார்க்குத் தண்ணிய அளிசெய்யும் தன்மையுடையன அல்லவோ? வைத்த முடிமிசை - கங்கையும் பாம்பும் கொன்றையும் கூவிளமும் முதலியவற்றை வைத்திருக்கும் திருமுடியின்கண், இலங்கு குவளை தனி போது விரித்த - விளங்குகின்ற குவளையின் ஒப்பற்ற மலரும் பருவத்து அரும்புகளை முறுக்கவிழச்செய்த, அலங்கு கதிர் ஒலியல் - அசைகின்ற வெண்கதிர்க் கடவுளாகிய மாலையை, நீ அணிந்தது என் மாறு - தேவரீர் அணிந்துகொண்டது என்ன காரணமோ? என்பதாம்.

விசேடவுரை: முதல்வன் - இங்கே நான்முகன், மதலை மாடம் - இங்கே இவற்றையுடைய பிரமாண்டத்தை உணர்த்தலால் ஆகுபெயர். கடவுள் புத்தேள் என்பன தெய்வத் தன்மையை உணர்த்தலால் குணத்தைக் குணியாக உபசரித்தவாறு. பாண்டில் - இங்கே திருமாலாகிய வெள்விடை; இறைவர்க்குரிய அறவடிவப் பாண்டிலை விலக்கற்கு, "கடவுட் பாண்டில்"

என்ருர். திருமாலின் வியாபகம் பிரதிட்டா கலே வரை உள தாயினும், பிரமாண் டத்து இடவரை ஊன்றிய'' என்றது அதனுள் இஃது அடங்குதலின். இடவரையும் என்னும் முற்றும்மை தொக்கது. ஊன்றுதல் - பதிதல்; வியாபித்தல். பள்ளி - அறிதுயில்; யோகநித்திரை. செம்புயல் - செந்நிறக் கொண்டல் வண்ணராகிய திருமால். இதனே, "பாலொளிநீத் தெழும்விடத்தால் முகில் வண்ணம் படைத்திருந்த - மாலவனுர், கலிக்கச்சி வந்தெய்தித் தவமுஞற்றி-மேலேயுருச் சிவந்தென்ன' என்னும் காஞ்சிப் புராணத்தாலறிக. உள் - இதய தாமரையை உணர்த்தலால் ஆகுபெயர். 'முத்த மாச்சுடர்'' எனச் சுடரினுக்கு வெண்மை கூறியது நையாயிகர் கொள்கைபற்றி. அன்றி பிரபஞ்ச அங்கியை நீங்கிய சுடர் எனினுமாம்.

இதயத்தின்கண் அதோமுகமாகவுள்ள திப்பிய தாமரையை மூலக்கனலால் மேலெழுவித்து உச்சுவாசம் நிச்சுவாசம் என்னும் நெய்யட்டும் கருவிகளால் (சிருக்கு சிருவங்களால்) அன்பாகிய நெய் பெய்து தகரவித்தை பயிலுதல் ஆகம அளவையான் அறியப்படுதலின், "பள்ளிச்செம்புயல் உள் விழுதுறீஇப் - புத்தேள் நிவந்த முத்தமாச் சுடர்'' என்ருர். இதனே "ஏய்ந்தசீர்த் தகரவித்தை முறைப்படி இதயக்கஞ்சப் - பூந்தழற் சிகைமேலீசற் போற்றுமா யவனேயோக்கும்'' என்னும் காஞ்சிப் புராண மினிது விளக்கும். உலகின்கணுள்ள சுடர்களெல்லாம் வளியிடைத் துளங்கலுறும்; இத்திப்பிய சுடர் அத்தன்மைத் தன்று என்பார் "எறிவளி எடுப்பினும் சிறுநடுக் குருச்சுடர்'' என்ருர். நடுக்கும் என்னும் உயர்வு சிறப்பும்மை தொக்கது. இனி உலகினிற் சுடர்கள் அணுகினுரைச் சுடுந்தன்மையுடையன; இச்சுடர் அணுகினுர்க்குத் தண்ணிழலாய் இன்பந் தருதலின், "முத்தச்சுடர்'' என முத்தினே உவமைகூறியது தண்சுடராந் தன்மைபற்றி எனினுமாம். இங்ஙனம் அச்சுடரின் சிறப்பியல்புகள் கூறப்பட்டவாறு காண்க.

இறைவற்கு "எங்கணும் திருக்கழலடி''யேயாயினும், அவரை இடையருது வழிபடும் மெய்யடியார்கள் இரண்டாகக் கருதி வழிபடுதலின் "அளிய'' எனப் பன்மை கூறினுர், ஓகாரம் எதிர்மறை. வைத்த என்னும் வினையினுள் செயப்படு பொருள் தொக்குநிற்றலின் அவை விரிக்கப்பட்டன. தழங்குகுரல் என்பது "தழங்குரல்'' என விகாரமானுற்போல, இலங்குகுவளே என்பது "இலங்குவளே'' என விகாரமாயிற்று.

உலகினில் கைவல்லார் புனையும் ஒலியல்கள் யாவும் மலர்களா லாய காரியமாக, இவ்வொலியல் தனக்குக் காரணமாய மலர்களை விரித்தற்குத் தான் காரணமாயுள்ளதென்பார் "இலங்குவளைத் தனிப்போது விரித்த - அலங்குகதிர் ஒலியல்" என ஒலியல் வேறுபாடு கூறினர். ஒலியல் இங்கே தலைக்கணியும் மாலை. வெண்கதிர்க்கடவுள் இறைவற்குத் தலைமாலையாதலை "கூனற் றிங்கட் குறுங்கண்ணி" என்னும் தேவாரத்தும் காண்க. மாறு ஏதுப்பொருள் தருவதோரிடைச்சொல். அதனைச் "சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே" என்பதிலுங் காண்க. ஏ - அசை. இறைவ, நின்னை யாமடையின் தலையளியாது தாளளித்துத் தாடலைபோல இயைந்து நிற்கும்வண்ணம் அருளுக என்பது குறிப்பெச்சம்.

ஊன்றிய செம்புயல், பாண்டில் செம்புயல், பள்ளிச் செம்புயல் எனத் தனித்தனி இயையும். தொடர்ந்தியையினு மிழுக்காது. நிவந்தசுடர், முத்தச்சுடர், மாச்சுடர், நடுக்குறுச் சுடர் என்க. சுடர் அண்மை விளி.

இனி: மானிடப் பெண்டிர் தெய்வத்தை நயந்த பக்கத் துறையில், இறைவர் அருளைப் பெறாது வருந்தும் தலைவி கூற்றாகக்கொண்டு, சுடர்வடிவினரே! தேவரீர் எனக்கு அருளாமை அளவில் அமைந்திலீர்; தேவரீரை எய்த்திளைத் தடைந்த வெண்சுடர்க் கடவுட்குத் தாளளித்திருப்பின் நன்றாகும்; அங்ஙனமன்றித் தலையளித்தமையால் தன் ஒளி வளர்ந்து என்னை வருத்துவதாயிற்று. சங்கரராகிய தேவரீருக்கு இது தகுமோ! என வருந்திக் கூறியதாகவும் உரைக்கலாம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil

இன்று இவ்வூர்க் கோவிலுக்கு வந்து சுவாமி தெரிசனம் செய்தேன். கோவில் அதிகாரிகள் கூட இருந்து ரொம்ப நல்ல முறையில் சுவாமிதெரிசனம் செய்து வைத்தார்கள், அதற்கு நன்றி.

(Sd.) L. G. L. Palaniappa Chettiyar,
Madras 24—4—59

நன்றி

சித்தாந்தச் செல்வர்
திரு. அ. தா, ப. திருஞானசம்பந்தனுர் அவர்கள்
திருவண்ணுமலை

தோற்றுவாய் :

நன்றி என்பதற்கு அறம், வீடுபேறு, பிறர்செய்த உதவி என்று போருள் கோள்ளலாம். கற்றுத் துறைபோய பெரும் புலவஞன இரவலனுக்குப் பண்பு நிறைந்த புரவலன் வேண்டுவன அளித்து உதவி செய்தல் நன்றியின்பாற் படும். அருள்பாலிக்கும் ஆண்டவன் நமக்காகச் சமைத்து வைத்திருக்கும் அரிய வீடிருக்க, அதுபற்றி யுணராமல், இம்மையில் நவநாகரிக முறையில் அமைத்துக் கோள்ளும் வீடுகள் உயர்வுடையன என்றெண்ணி யிறுமாக்குநரை, நல்வழிப்படுத்தி நற்றவத்தின் உறுதிப்பாட்டில் பெறும் வீடோன்று உண்டு என்பதை ஆணித்தரமாக எடுத்து விளம்பும் அடியார் குழாத்திற்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்ரேம். அவல வாழ்க்கையில் அலைமோதுகின்ற செல்வர்கள், வறியவர்களின் வாழ்க்கைத் துன்ப ஆழம் தேரிந்து அதைத் துடைக்க வழி தேரியாமல், தங்கள் சுக வாழ்க்கையில் ஈடுபடும் தன்மை பூண்டார்க்கு என்றும் நன்றி தோன்ருது. பிறர்படும் இன்னல் தான் பெற்றதாக எண்ணி, அதைப் போக்கக் கழுவாய் தேடும் தன்மை வாய்ந்தவர் எவராயினும், அவர் நன்றி பேறுதற்கு உரியவராவர். பிறன் பெற்ற இன்னல் தான் பெற்றதாக எண்ணுபவன் உள்ளமே அன்புநிறைந்த உள்ளமாகும். அன்பிற்கு அடைக்குந் தாழும் உளதோ ? அன்புடையார் மாட்டு உளதாகிய புல்லிய கண்ணின் நீர்தானே ஆரவாரத்தைத்தரும் என்பதாம். அன்பு பெற்ற உள்ளங்கள் அருள் பெற்றவை. நன்றி அவற்றிற்கு நிலைபேறுடையதாகும்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் (குறள் 1 அன்புடைமை)

அடக்கமும் - அடியார்களும் :

அளவுமிஞ்சிய அடக்கம் கோண்ட செம்மாப்புப் பூண்டவனும், எரிகின்றச் சேந்தழலைக் கக்கும் எரிமலையும் நிகர். எரிமலை

பார்வைக்கு எளிமையாய்த் தோன்றும், கந்தலாடை யுடுத்திக் கள்ளங் கபடமற்றுக் கிளிமொழி பேசிடும் பேதும்பைபோல. அது எந்த நேரத்தில் தன் சுயநிலையைக் காட்டும் என்றுக் கதைக்க இயலாது. அஃதேபோல், திருநீறும், தாழ்வடமும் பூண்ட அடியார்களும், திருந்திய திருமண்ணும், துளசி மணி மாலையும் அணிந்த ஆழ்வாராதியர்களும், பார்வைக்கு எளிய தோற்றத்துடன் விளங்கினர்; விளங்குவர். இத்தகையோர்க்குச் சினம் தோன்றுங்கால், அது எந்த அளவில் சென்று நிற்கும் என்று சொல்ல முடியாது. எடுத்துக்காட்டாக, திருநாவுக் கரசரும் மாணிக்கவாசகரும் அமைகின்றனர். இதில் முன்ன வர் தூய சிந்தையும் துதைந்த பொன்னீறும், தாழ்வடமும் கொண்டு விளங்கியவர். பின்னவர் அரியணையேறி, மக்கள் மனங்குளிர, அரசாண்ட அரிமர்த்தனனுக்கு அமைச்சுத் தொழில் பூண்டவர். இருவரும் அரசர்களைத் துரும்பென மதித்தனர்.

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரநற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

— திருநாவுக்கரசர்

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க் கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே

—மாணிக்கவாசகர்

மேற்கண்ட இருவரும் சைவ உலகில் பெரும் புரட்சியை நிலைநாட்டியவர்கள் இவர்களால்தான் சைவம் நாளும் நலம்பல பெற்றுச் சிறந்தோங்கியது என்பதில் ஐயமில்லை. நேரிய உள்ளப் பாங்கும், நிதானமான செயல்களும், நன்மையான வழிகளும் பூண்டுத் திகழ்ந்தவர்களே நற்றவ அடியார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையைப்பற்றிச் சிறிதும் நினையாது, மக்கள் வாழ்க்கை வையகத்தில் நேரிய முறையில், அருள்தோய்ந்த

வகையில் நிகழ வேண்டும் என்ற பேற்றிமையுடன் விளங்கிய ராவர். அவர்களின் நல்லெண்ணத்திஞல்தான், நாடும் இந்நாள் வரை நலமுறத் திகழ்கின்றது.

நன்றி யாருக்கு?

பிறருடைய பணத்தைப் பறித்துத் தன்பெயரில் தயையிலாத் தருமங்கள் பலசெய்து, தன் காலத்திலேயே தழையாமற்போகின் றதைக காணும் அறிவற்ற ஆடம்பரக்காரர்களுக்கு நன்றி செலுத்தலாமா? பிறர் வாடத் தான் வாழ, பிறர் ஏங்கத் தான் சுகப்பட, பிறர் அலேக்கப்பேறத் தான் உயர்வுபேற எண்ணு கின்றவர்களுக்கு நன்றி சேலுத்தலாமா? ஊருக்கு நல்லது சோல்லித் தான் ஊனமிகு வாழ்க்கையை வாழுகின்றவனுக்கு நன்றிசேலுத்தலாமா? சேலுத்தமுடியாதேன்க! பின் யாருக்கு நன்றி? வறுமை நோய் வன்மையாக வாட்ட, உடுக்கும் உடை யைப்பற்றிக் கவலேயின்றி, உண்ண உணவின்றி, வற்றிய பழங்களேயும், மிருக இனம் உருசிப்பார்த்துப் புசித்துப்போட்ட வற்றையும், உண்ணும் இயல்புடையாரிடம் பிறந்த சேம்மையுறு கருத்துக்களேயும், அவர்களின் வாழ்நாளில் கண்டபேருண்மை களேயும் அறியக் கடமைப்பட்டிருக்கின்ருேம். அவர்களுக்கு நன்றி நேர்மையாக நிலேக்கின்றது.

உலகமேதைகளுக்கு நன்றி :

வையகத்தில் வாழ்ந்து இறந்தவர்கள் கணக்கிலடங்கார். அவர்கள் பேற்ற சுகம் அதிகமில்லே. தங்கள் வாழ்க்கையை நல்லுறு கருத்துக்களே எண்ணுவதின் மூலம் சேலவுசெய்து துன்பம் தோய்ந்த வாழ்க்கையில் மிதந்து, மக்கள் சமுதாயம் நல்லனவேல்லாம் பேற்றுச் சிறக்க வேண்டும் என்றேண்ணி யவர்கள் சில்லோர். இவர்கள் சுகமாகப் பஞ்சணேயின்மேற் றுயின்று, இன்பமாகத் தங்கள் வாழ்நாட்களே இணேயிலா மகிழ்ச்சியில் சேலுத்தியிருப்பார்களேயாஞல், இன்று நாம் அனுபவிக்கும் நவநாகரிகப்போருள்களும், வாழ்க்கையின் வசதிச்சாதனங்களும், அமைந்திரா. அவர்களேப்பற்றிக் கனவிலும் யாரும் எண்ணுவதில்லே. நன்மை சேய்தாரை எண்ணு விடில் நலம் பேருகுமா?

பூமிக்கு ஈர்க்கும் சக்தியுண்டு என்று கண்ட சர் ஐசக் நியூட்னுக்கும், தூரத்தில் பேசுவதைக் கம்பி மூலம் துரிதமாகப் பக்கத்தில் பேசுவதைப் போலக் கேட்டுக்கொள்ள உதவும் கருவியைக் கண்ட கிரஹாம் வெல்லிற்கும், சூரியன் பூமியைச் சுற்றிவருகின்றது என்கின்ற பெருஞ் சித்தாந்தத்தை விளக்கி யளித்த கோபர் நிகசுக்கும், விலையுயர்ந்த உலோகமான ரேடியத்தைக் கண்ட மேடம் கியூரிக்கும், நீராவியின் சக்தியால் பெரிய இயந்திரங்களை ஓட்ட முடியும் என்று கண்ட ஜேம்ஸ் வாட்டுக்கும், பல ஆயிரமைல்கள் தூரத்தில், பல்லோர் பேசுவதைக் காற்றின்மூலம் இழுத்துப் பேச்சலைகளை மின்னலைகள் மூலம் பரப்பிக் கேட்குமாறு ரேடியோ என்ற கருவியைக் கண்ட மார்க்குனிக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இவற்றை யெல்லாம்விட நாம் தலையாய நன்றியைச் செலுத்த சிலர் இருப்பர். அவர்களை என்றுமே மறக்கக்கூடாது. ஒருவர் செய்த சிறு நன்றியையும் என்றும் நினைவில் கொள்ளல் வேண்டும். பலநன்றி செய்த ஒருவர் நன்றல்லாத ஒன்றைச் செய்கின்றபொழுது பொறுத்துக்கொள்ளும் இயல்பு புவிமாந்தர்களுக்கு அமையவேண்டும் என்கின்றார் தேவரும்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று (குறள் 8 செய்ந்நன்றியறிதல்)

நன்றியை மறப்போர் வாழ்நாள் மக்கிய வேடியுப்பிற்குச் சமம். வாழ்க்கை என்ற சூழ்கடலில், வாழ்நாள் என்கின்ற மரக்கலத்தை வகையாகச் செலுத்த விரும்புகின்றவர்களுக்கு, வன்மை வாய்க்கப்பெற்றோர் தொடர்பு மெத்த அவசியம். தீய செயல்களில் இழுத்துச் சென்று பிணிக்க, ஆயிரக்கணக்கில் நண்பர்கள் தோன்றுவர். நல்வழிப்படுத்தி ஒருவருக்கு நலம் பல தேட, பல்லாயிரவரிவரில் ஒருவரே நற்றுணையாயிருந்து நல்லன தேடித்தருவர். (தொடரும்)

பரபரக்க வேண்டா பலகாலுஞ் சொன்னேன்
வரவரக் கண்டாராய் மனமே—ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே
ஏங்கி இளையா திரு. (சிவபோகசாரம்)

இதிஹாஸம்

சிரோமணி, பிர்மஸ்ரீ K. இராஜகோபால சாஸ்திரியார் அவர்கள்
வடமொழி ஆசிரியர், ஆகமப் பாடசாலை, தருமபுரம்.

அறத்தை அடிப்படையாகக்கொண்டு விளங்குவது பாரத நாடு. இந்நாட்டில் சைவம், வைஷ்ணவம், த்வைதம், அத்வைதம் போன்ற பல மதங்கள் நிலவுகின்றன. ஒவ்வொரு மதத்தினரும் மோக்ஷம் அடைய வழி கூறுகின்றனர். பல சாதனங்களையும் காட்டுகின்றனர். மோக்ஷம் அறிவற்றது துன்பக் கலப்பில்லாத இன்ப மயமானது. மோக்ஷமடைந்தவர் மீளவும் ஸம்ஸார சாகரத்தில் விழுந்து துன்பமடையார் என்று எல்லா மதவாதிகளும் மோக்ஷத்தை ஒரேவிதமாக கூறினாலும் அதை அடைவதற்குரியனவாகிய சாதனங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகவே சொல்லப்படுகின்றன. ஆயினும் பொய் சொல்லக்கூடாது, உயிர்களைக் கொல்லாமை வேண்டும். களவு, காமம், கோபம், லோபம் முதலிய தீயகுணங்களை ஒழிக்க வேண்டும். கடவுளை வழிபடவேண்டும். இறைவனது பாத கமலத்தில் இடையருத பக்தி கொள்ளல்வேண்டும் என்பன போன்ற அடிப்படையான சில தர்மங்கள் எல்லா மதங்களிலும் ஒரு வகையானவையே. இவ்விதம் ஒரே விதமான தர்மங்களை அடிப்படையாகக்கொண்டு பல மதங்கள் இருத்தல் காலச்சுழலில் சிக்கி ஏதாவது ஒரு மதம் மறைவுறும் காலத்திலும் மூலபூதமான தர்மத்திற்கு அழிவு ஏற்படாமல் காத்தல் ஒன்றையே கருத்தாகக் கொண்டதாகும். ஆகவே தர்மம் உலகத்திற்கு மூலம் என்பதை धर्ममूलमिदं जगत् என்ற புராண வாக்கியமும் வலியுறுத்துகிறது.

வர்ணங்கள், ஆச்ரமம், தேசம், காலம் இவைகளால் தர்மம் வேவ்வேறு வகையாக இருக்கும். இவை தர்மம் இவை அதர்மம் எனபதை துணிய வேதமே பிரமாணமாக ஆகும். வேதமோ அரசனைப் போல் இதைச் சேய், இதைச் செய்யாதே என்று கட்டளையிடுகிறது. அக் கட்டளைக்குப் பணிந்து ஆன்றோர்கள் தர்மங்களை செய்து வருகின்றனர். ஆனால் காலத்தின் மாறுபாட்டால் வேதத்தின் கட்டளைக்குப் பணியாமல் அதர்மத்தைச் செய்தால் என்ன என்று வினு

ஏற்படுகிறது. அவ்வாறு வினவும் மக்களுக்கு நண்பனைப் போல புராண இதிஹாஸங்கள், தர்மங்களால் விளையும் நன்மைகளையும் அதர்மத்தால் விளையும் தீமைகளையும் உதாரணத்துடன் கதைகள் மூலம் விளக்கி நல்ல அறிவு புகட்டுகின்றன. புராணங்களும் இதிஹாஸங்களும் வேதார்த்தமாகிய தர்மத்தை விரித்துரைத்தலாலேயே इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत् (இதிஹாஸ புராணங்களால் வேதார்த்தத்தை எடுத்துரைக்க வேண்டும்) என்று இதிஹாஸ புராணங்களின் மகிமை கூறப்பட்டுள்ளது. மேலும் வேதத்தை யாவரும் அத்யயனம் செய்யக்கூடாது. மூன்று வருணத்தினரே அத்யயனம் செய்யவேண்டும். இதிஹாஸபுராணங்களையோ யாவரும் கேட்டுத் தர்மங்களை தெரிந்துகொள்ளலாம். மேலும் வேதத்தின் பொருளை உணர்வதிலும் பல இடர்கள் உண்டாகின்றன. மிகச் சுருக்கமாக சில தர்மங்கள் கூறப்படும். சில தர்மங்கள் சம்பிரதாயமாக கொள்ளக் கிடக்கும். இவைகளை எல்லாம் அறியாமல் வேதார்த்தம் கூறுவது கடினமாகும். அதனால்தான் बिभेत्यल्पश्रुताद्वेदः मामयं पीडयेदिति (என்னைத் துன்புறுத்துவான் என்று வேதம் சிற்றறிவுடையானைக் கண்டு நடுங்குகிறது) என்றது புராணம்.

இதிஹாஸ புராணங்கள், மருத்துவர் வெல்லத்தினுள் மருந்தை வைத்து நோயாளிக்குக் கொடுப்பது போல தர்மங்களை கதைகளுள் புதையச் செய்து அக்கதைகள் மூலம் தர்மத்தை விரித்துரைக்கின்றன. இக்கருத்துக்கொண்டுதான் முற்காலங்களில் இதிஹாஸங்களையும் புராணங்களையும் தினம் எடுத்துரைக்க அரசர்களால் பல மான்யங்கள் விடப்பட்டதாக சரித்திர சான்றுகளாலும் பல கல் வெட்டுக்களாலும் அறியக் கிடக்கிறது. மேலும் யாகம் முதலியன செய்யும்போது இடையில் ஏற்படும் ஓய்வு நேரங்களில் இதிஹாஸ புராணங்களைப் படிக்கச் செய்து கேட்கவேண்டும் என்று விதியுள்ளது. தேவ யக்ஞம், பித்ரு யக்ஞம், பூத யக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பிர்ம யக்ஞம் என்ற ஐந்தும் தினம் அந்தணர்கள் செய்ய வேண்டியவை. இவை பஞ்சமகா யக்ஞம் எனப்படும். இவற்றில் பிர்ம யக்ஞம் செய்யும்பொழுது இதிஹாஸ புராணங்களுக்குத் தர்ப்பணம் செய்யப்படுகிறது. பாரத நாட்டிலுள்ள பதினான்கு வித்தைகளுள் புராணமும் ஒன்று. இது வேத புருஷனுக்கு உபாங்கம் என்றும் கூறப்படுகிறது. (தேவயக்ஞம் - தேவர்

களுக்குத் திருப்தி செய்விக்கின்ற வைச்சுவ தேவம், தேவ பூஜை முதலியன. பித்ரு யக்ஞம் - பித்ருக்களைத் திருப்தி செய்யும் தர்ப்பணம். பூத யக்ஞம் - காகம் முதலிய ஜந்துக் களுக்கு பலிபோடுதல். மனுஷ்ய யக்ஞம் - விருந்தோம்புதல். பிர்ம யக்ஞம் - வேதம் ஓதிப் பிறகு தேவர், பிதுருக்கள் ரிஷிகள் முதலியவர்களுக்குத் தர்ப்பணம் செய்தல்) இவற்ருல் இதிஹாஸ புராணங்களின் மகிமை புலப்படும்.

இதிஹாஸ புராணம் என்ருல் என்ன? इति - ह - आस (இதி - ஹ - ஆஸ) இவ்வாறு அல்லவா இருந்தது என்பது இதிஹாஸ என்ற பதத்தின் பொருள். முற்காலத்தில் இப்படி இருந்தது என்று பழைய காலத்தில் நடந்த சரித்திரங்களைப் கூறுவன இதிஹாஸங்கள். முற்காலச் சரித்திரங்களை கூறும் வாயிலாக தர்மங்கள் உரைக்கப்படுகின்றன. பழமையானது. அண்டியவரை முன்னுக்குக்கொண்டுவருவது; முற்காலத்திலும் புதியதுஎன்று புராணஎன்ற பதத்திற்குப் பொருள்கொள்ளப்படும்.

सर्गश्च प्रतिसर्गश्च वंशो मन्वन्तराणि च ।
वंशानुचरितं चेति पुराणं पञ्चलक्षणम् ॥

உலக சிருஷ்டி, உலகத்தின் ஒடுக்கம், சந்திர சூரிய வம்சம் பதினுன்கு மன்வந்தரம், பிரசித்திபெற்ற அரசர்களது சரித் திரம் என்ற ஐந்தும் கூறப்படுவது புராணம் என்று அதன் லக்ஷணம் சொல்லப்படும். 71 தேவ யுகம் கொண்டது ஒரு மன்வந்தரம் எனப்படும். அக்காலத்திற்கு அதி தேவதையாக உள்ளவர் மனு. இவ்வாறு 14 மன்வந்தரங்கள் கூறப்படு கின்றன. இப்போழுது இருக்கக் கூடிய இதிஹாஸங்கள் மகாபாரதமும் இராமாயணமும் ஆகிய இரண்டே. புராணங் களும் இதிஹாஸங்களும் வரலாற்று நூல்களே யாயினும் இதிஹாஸங்களைத் தனித்தும், புராணங்களைத் தனித்தும் கூறக் காரணம் இருக்கவேண்டும். இதிஹாஸங்களில் ஒருவருடைய வாழ்க்கை வரலாறு தொடங்கி விரிந்து சமாதானத்தாலோ, பட்டாபிஷேகத்தாலோ, முடிவடைகிறது. புராணங்களிலோ பக்திக்கு வித்தான பல கதைகள் உள்ளன. ஐந்து லக்ஷண முடையன. இதிஹாஸங்கள் இப்படியில்லை.

வேதங்களால் உணரத்தகுந்த பரமபுருஷன் இராமனுக ஆனபொழுது வேதம் வால்மீகி முனிவரின் வாயிலாக இராமா யணமாக வந்தது என்று பொருள்படும்.

वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे ।
वेदः प्राचेतसादासीत् साक्षाद्रामायणात्मना ॥

என்ற சுலோகம். வால்மீகி முனிவர் இராமாயணத்தை இயற்றியவர். அவர் வருணனுடைய பத்தாவது பிள்ளை என்பது,

प्रचेतसोऽहं दशमः पुत्रो राघवनन्दन

(ஏ! இராமா! நான் வருணனுடைய பத்தாவது பிள்ளை.) என்ற இராமாயண சுலோகத்தால் தெரியும். (உத்தரகாண்டம் - 96 சர்க்கம்). கந்தபுராணத்தில் வைசாக மாகாத்மியம் கூறுமிடத்தில் வால்மீக என்ற முனிவருக்கு சர்ப்பத்தினிடம் தோன்றியவர் வால்மீகி என்று உளது. பாத்ம புராணத்தில் வேடன் ஒருவன் சப்த ரிஷிகளின் உபதேசத்தால் அசைவுற்று இராமநாம ஜபம் செய்தான். அந்த உடலின்மேல் புற்று (வல்மீகம்) உண்டாயிற்று. நெடுநாட்கழித்து திரும்பவும் சப்த ரிஷிகள் வந்து அவரை அழைத்தபோழுது மழையினுல் புற்றுக்கரையை இராமநாம மகிமையினுல் முனிவரின் உருவத்தோடு அவர் தோன்றினுர் என்று கூறப்பட்டிருக்கிறது. அத்யாத்ம இராமாயணத்தில் அயோத்தி காண்டத்தில் புற்றிலிருந்து கை கால்களுடன் தோன்றியபடியால் வால்மீகி என்ற பேயர் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஒருவருடைய பிறப்பைப்பற்றி பல புராணங்களில் பலவகையாக சொல்லப்பட்டிருப்பது, ஒவ்வொரு கல்பத்தில் ஒவ்வொருவிதம் என்றுதான் பெரியோர்கள் கொள்ளுவது வழக்கம். கதைகளில் கருத்தைச் செலுத்தாமல் தர்மத்தை விரித்துரைக்கவே இவை எல்லாம் என்று கொண்டால் மாறுபாடுகள் என்றுமே தோன்ருவன்ரே! * இராமாயணத்தில் சீதையின் சரிதம், இராவணவதம், இராமகதை, ஆக்யானம், இதிகாசம் என்று பலவிதமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. 24000 சுலோகங்கள் உள்ளன. ஒவ்வொரு ஆயிரத்தின் ஆரம்ப சுலோகத்தின் எழுத்து காயத்ரீ மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்தாக அமைந்துள்ளது. அந்த இருபத்தினுன்கு சுலோகங்களையும் தனியாக எழுதி வாசித்தால் இராமகதை சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பது தெரியும். இதைக் காயத்ரீ இராமாயணம் என்று சொல்வது வழக்கம். பிற்காலத்தில் இடைச்செருகல் ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தால்தான் இவ்விதம் அமைத்தார்கள் போலும். இராமாயணத்தில் முதல் காண்டத்தின் முதல் சர்க்கம் சம்க்ஷேப இராமாயணம் எனப்படும். சம்க்ஷேபம் - சுருக்கம்.

---

* இராமாயணத்தின் பெயர்.

*நாவலர் காவலர்

கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார், சென்னை.

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

உலகெலா முணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

மெய்யன்பர்களே, வணக்கம். இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பை அடியேனுக்கு அளித்த குருமகா சந்நிதானத்தின் திருவடிகட்கு என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இவ்வாதீன சம்பந்தமாக நடைபெறும் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி தேவஸ்தான பிரமோற்சவத்தின் அங்கமாக இம்மாநாடு நடக்க ஏற்பாடு செய்த மகாசந்நிதானத்தின் கருணையை நாம் பாராட்டாதிருக்க முடியுமா ? இம்மாநாட்டில் பல அறிஞர்கள் இனிய,தெய்வீகத் தமிழ்ச் சொற்பொழிவுகளை நடத்தியுள்ளார்கள். அடியேனும் எனக்கிட்ட பணியையாற்ற முன் வந்துள்ளேன். பரமன் உள்ளிருந்து உணர்த்த உணர்ந்ததைச் சொல்லுகிறேன். குணமிருப்பின் அதனை யாண்டவனிடம் அர்ப்பணம் செய்யவும். குற்றமிருப்பின் அது மனிதனின் இயல்பு என எண்ணி எனது அக்ஞானத்திடம் ஒதுக்கிவிடவும். என்னை சும்மா விட்டு விடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“நாவலர் காவலர்” என்ற சொற்றொடர் பெரிய புராணத்துள் ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம் 148 ஆவது பாட்டின் கடைசி அடியின் முதலிலுள்ளது. இனி பெரிய புராணம் பற்றிச் சில வார்த்தைகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பற்றிச் சில வார்த்தைகளும், மூன்ருவதாக அவர்கள்

---

*தருமையாதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் 20—5—59 அன்று நிகழ்த்திய சொற்பொழிவுச் சுருக்கம்.

அருளிய 7 ஆம் திருமுறைப் பாடல்களைப்பற்றிச் சில வார்த்தைகளும் பேச முயல்வேனாக.

A. தமிழர்களது பிரமாண நூலாக விளங்குவது பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணமாகும். இது ஒரு அரிய தமிழ்க்காவியம். இதன் தலைவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். தலைவியர், பரவையாரும், சங்கிலியாரும் ஆவார்கள். நாடு சோழநாடு. நகரம் திருத்தொண்டத்தொகை யருளிச் செய்ய இடமாக இருந்த திருவாரூர் ஆகும். இனிக்காவியமென்றால் அதில் ஒரு அரசர் வரலாறு இருக்கவேண்டும் என்றபடி மனுநீதி கண்ட சோழ அரசனின் வரலாறும் பேசப்பெற்றுள்ளது. மேலும், பெரும்பொழுது சிறுபொழுது, போர் முதலியவைகளும் இக்காவியத்தில் இடம் பெற்றுள்ளன. காவியத்தின் தலைவ- சுந்தரமூர்த்தி நாயனார் ஆதலால், அவர் வரலாற்றைத் தெய்வச் சேக்கிழார் பெருமான் இக்காவியத்தில் ஐந்து இடங்களில் வைத்துப் போற்றியுள்ளார்கள். அதன் விபரம் பின்வருமாறு :

1. திருமலைச் சிறப்பு என்ற பகுதியில் இவர் வரலாறு கூறும் பாட்டுக்கள் 40 ஆகும். இரண்டாவதாகத் தடுத்தாட் கொண்ட புராணப் பகுதியில் 203 பாட்டுக்கள் இவர்தம் வரலாற்றைக்கூறும். மூன்றாவதாக ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் இவர் வரலாற்றை 409 பாட்டுக்கள் பரக்கக் கூறும். நான்காவதாக இவர் வரலாற்றைச் சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில் 175 செய்யுட்களால் சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார்கள். கடைசியாக இவர் வரலாற்றின் பிற்பகுதியை வெள்ளானைச் சருக்கத்தில் 53 பாட்டுக்களால் விளக்கப்பெற்றிருக்கிறது. மொத்தம் 880 செய்யுட்கள்.

B. இவ்வாசாரிய மூர்த்திகளைச் சிலர் சிற்றின்பப் பிரியர் என்று கூறி அபசாரப்படுகிறார்கள். அது சற்றும் பொருந்தாது என்று பின்வரும் சான்றுகளால் ஒருவாறு நிரூபிப்பாம்.

1. திருமலைச் சருக்கத்தில் இந் நாயனார் முதன் முதலாகத் தேவியாரின் சேடியர்களான அநிந்திதையையும், கமலினியாரையும் சந்திக்க நேர்ந்த பகுதியை கூறும்போது, ''தீதிலாத் திருத் தொண்டத் தொகை தரப்போதுவார் அவர்மேல் மனம் போக்கி'' என்றருளியுள்ளபடியால் இவராக அவரைப் பார்த்துக் காதலிக்கவில்லை என்பது தேற்றெனப் புலப்படும்.

2. தடுத்தாட்கொண்ட புராணம் முதல் செய்யுளிலேயே தெய்வச் சேக்கிழார் பெருமான் அந்நாட்டில் அழகு நிறைந்த பெண்கள் வாழ்ந்தார்கள் என்றருளிச் செய்துள்ளார்கள். அப்படியிருந்தும் நம் நாயனர் ஒரு பெண்ணையும் பார்த்ததாகக் கூருத படியால் இவரைச் சிற்றின்ப பிரியர் என்று சொல்லலாமா? சிந்திக்கவும்.

"......மங்கையர் வதன சீதமதி யிருமருங்கு மோடிச்
சேங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடிநாடு"

3. பரவையாரை முதன் முதலாகக் கண்டபோதும் "நற் பேரும் பான்மை காட்டக் கண்டார்" என்ருர் சேக்கிழார் பெருமான். மேலும் அவ்வம்மையார் கோயிலைவிட்டு அகன்றபோதும் அவரைத் தேடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் "ஈசனருள் எந்நேறிச் சென்றதே" என்றும், "எம்பிரானருள் என்நேறிச் சென்றதே" என்றும், "எந்தையாரருள் எந்நேறிச் சென்றதே" என்றும் தேடினரே ஒழிய பெண்ணைத் தேடினர் என்று கூற வில்லையே. பிறகு பரவையாரைத் திருமணஞ் செய்து கொண்டு அவர் வாழ்ந்த வாழ்க்கையையும் சேக்கிழார் சுவாமிகள் "பன்னுளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினர்" என்று தானே சொல்லப்பெற்றுள்ளது!

4. இனி ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணத்துள், கோட்புலி நாயனர் என்ற ஒரு பெரியவர் தாம் பெற்ற "தேனர் போதைச் சிங்கடியாரையும்" "மானர் நோக்கின் வனப்பகை யாரையும்" ஏற்றுக் கோள்ள வேண்டியபோது நமது நாவலர் காவலர் அவர் தம்மைத்தம் மடிமீதிருத்தி உச்சிமுகந்து மகண்மையாகக் கோண்டார்கள். அதுமட்டுமா? அவர்கள் தம் மக்கள் என்ற உண்மையைத் தம் திருப்பாட்டுகளில் அருளிச் செய்துள்ளார் என்ருல் இவரைச் சிற்றின்பப் பிரியர் என்று சொல்வது தகுமா என்று அறிஞர்களே சிந்திக்கவேண்டும்.

5. நாயனரும் திருவோற்றியூரில் வாழ்ந்துவந்த சங்கிலி யாரையும் பார்க்க நேர்ந்ததைச் சேக்கிழார் பெருமான் "முந்தை விதியால் வந்ததோருநாள் முதல்வர் கோயிலுட் புகுந்தார்" என்றும், பிறகு "சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்ருர்"

என்றும், பரமனையேவேண்டி அம்வம்மையாரைத் திருமணஞ் செய்து கொண்டார் என்றும் "இந்நிலையிற் பேரின்பம் இனி தமர்வார்" என்றும்தானே புகழ்ந்துள்ளார்கள், உண்மை யிவ்வாறிருக்க அவர்களைச் சிற்றின்பப்பிரியர் எனக் கூறுவது அறிவுடையோர் செயலாகுமா ?

6. சேரமான் பெருமாள் நாயனார் புராணத்துள்ளும் பரவை யாரைப் பற்றிச் சொல்லவந்த தெய்வச் சேக்கிழார் பெருமானும் அவரைத் "தூண்டுசோதி விளக்கனையார் அமுது அமைத் தார்" என்றுதானே கூறியுள்ளார்கள்.

7. இனி வெள்ளானைச் சருக்கத்திலும் நமது நாவலர் காவலர் அஞ்சைக் களத்தப்பரைத் தோத்திரஞ் செய்தபோது "வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்" என்று தானே பாடியுள்ளார். பரமனை வேண்ட தேவர்கள் புடைசூழ வெள்ளானை வந்தது. தேவர்கள் நமது சுவாமிகளைக் கயிலைக்கு எழுந்தருள வேண்டினார்கள். அப்போதும் சுந்தரமூர்த்தி நாயனார் தமது இரு தேவியாரான பரவையாரையும் சங்கிலி யாரையும் நினைத்ததாகப் புராணம் கூறவில்லையே! தம் தோழராக விளங்கிய சேரமான்பெருமாளையும் கூட நினைக்க வில்லையே என்றால் இவர் தம் தூய வாழ்க்கையின் உண்மை நிலையை உணர்ந்த அறிவிலிகள் இவர்மீது சிற்றின்பப்பிரியர் என்ற குற்றத்தைச் சாட்டி அபசாரப்படுகிறார்கள்! இனி யாகிலும் அவர்கள் நமது சுவாமிகளிடம் ஈடுபட்டுப் பேறு பெறுவார்களாக !

(தொடரும்)

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil

I visited this famous temple today with a pretty big party. The authorties took us friends. I am much thankful.

(Sd.) M. Sivaraman,
Retd. Vety Officer, Madras. 27-3-59

செய்திகள்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மகாகயிலாயத் தலயாத்திரை

வட இந்தியத் தலங்களில் சிறந்த தலங்களுக்குச் சென்று தரிசித்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்கள் பலருடன் 19—6—59 வெள்ளிக்கிழமை விடியலில் மகா கயிலாய தரிசனம் செய்ய எழுந்தருளினார்கள். ஸ்ரீ காசி விசுவநாதரை அபிஷேக ஆராதனைகள் செய்து தரிசித்தார்கள். அங்கிருந்து வடக்கே உள்ள பல புண்ணியத்தலங்களையும் தரிசித்துக் கயிலைக் காட்சியைத் தரிசிக்க எழுந்தருளியுள்ளார்கள்.

ஜன்மநக்ஷத்திர விழா

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மாதந்தோறும் பாடல்பெற்ற சிவதலங்களில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் திருப்பதிகங்களை அச்சிட்டு வழங்கி வருதல் போல இம்மாதம் தென்கயிலாயமாகிய திருவையாறு திருக்கோயிலில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தென்கயிலை வடகயிலைத் திருப்பதிகங்களை அச்சிட்டு வழங்கியருளினார்கள்.

சிருங்கேரி, ஸ்ரீ சாரதா பீடம்

ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் வருகை

தருமையாதீனம் மடாலயத்திற்கு 16-6-59 வியாழக்கிழமை சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் வருகை புரிந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீமத் சுவாமிகளைப் பொன்னுடை போர்த்து வரவேற்றார்கள். திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. திருமடம், ஆதீனக் கல்வி நிலயங்கள், வேத சிவாகம பாடசாலைகள் சார்பில் வரவேற்புரை வாசித்துக் கொடுக்கப்பட்டன. ஸ்ரீமத். சுவாமிகள் அவர்கள் மறுமொழி கூறக் கூட்டம் நிறைவுற்றது. ஸ்ரீமத் சுவாமிகள்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் கதிராமங்கலம் கிராமத்தில்
கூட்டுறவு விவசாய சங்கங்கள் தொடக்க விழா

சென்னை மாநில அறநிலய அமைச்சர், " நல்லறங்காவலர் "
கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள் சங்கத்தைத் தொடங்கி வைத்தல்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடன் திருமடத்திற்குள் சென்று பூசை மடம் பண்டாரக்கட்டு முதலியவற்றைக் கண்டு இரவு பூசைக்குப்பின் எழுந்தருளியானூர்கள்.

மண்டலாபிஷேகக் கார்த்திகை

ஆண்டுதோறும் வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு நடைபெறும் மண்டலாபிஷேகக் கார்த்திகை 5–6–59 ஆம் நாள் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்தார்கள். சென்னை அறநிலைய ஆணையர் திரு. A. உத்தண்டராமப் பிள்ளை அவர்களும் மற்றும் பலரும் வந்து தரிசித்து வழிபட்டனர்.

திருஞானசம்பந்தர் அபிஷேகம்

சீகாழி தேவஸ்தானத்தில் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு 3—7—59 ஆம் நாள் ஆறு அபிஷேகங்களில் ஒன்று நிகழ்ந்தது. மாலை 6 மணிக்கு ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், திரு. ம. சிவசம்பு அவர்கள் சொற்பொழிவாற்றினூர்கள். இரவு ஞானசம்பந்தப்பெருமான் திருமுறைப் பாராயணத்தோடு திருக்கோயிலை வலமாக எழுந்தருளினூர்.

கதிராமங்கலம் மருவத்தூர்களில்

கூட்டுறவுச் சாகுபடியாளர் சங்கங்கள் தொடக்கம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்திற்குரிய கதிராமங்கலம் மருவத்தூர் கிராமங்களில் சில நிலங்களுக்கு அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சாகுபடியாளர் சங்கங்களைச் சென்னை மாநில உணவு விவசாய அறநிலைய அமைச்சர் கனம், திரு. M. பக்தவத்சலம், B.A., B.L., அவர்கள் 3-7-59 அன்று திறந்து வைத்தார்கள். சிறந்த முறையில் அமைச்சர் அவர்களை வரவேற்று சுவாமி தரிசனம் செய்து வைக்கப்பட்டது. இச்சங்கம் எங்ஙேந்த வகையில் பயன் அளிக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

சென்னை மாகாண கவர்னர் விஜயம்

5—7—1959 சென்னை கவர்னர் அவர்கள் திருவையாறு தேவஸ்தானத்திற்கு விஜயம் செய்தார்கள். தம்பதி சமேதராய் வந்திருந்தார்கள். வழக்கப்படிக்குள்ள மரியாதையுடன் வரவேற்று, சுவாமி தரிசனம் செய்துவைக்கப்பட்டது. பூர்ணகும்பம், மாலை, பட்டு கட்டுதல் முதலியன உயர்ந்த முறையில் நடந்தன. மிக்க திருப்தி அடைந்தார்கள். போட்டோவும் எடுக்கப்பட்டது. விசிட்டர் புத்தகத்தில் நன்ருக எழுதி இருக்கின்ருர். டிப்டி கமிஷனர் அவர்களும் அன்று வந்திருந்தார்கள்.

7—7—1959 கவர்னர் தம்பதிகள் வேளூர் தேவஸ்தானத்திற்குக் காலை 11 மணிக்கு விஜயம் செய்தார்கள். வழக்கமான மரியாதைகளுடன் வரவேற்று, சுவாமி தரிசனம் செய்து வைக்கப்பட்டது. நல்ல திருப்தியுடன் சென்ருர்கள். அன்று மாயூரம் ஸ்ரீ இராமநாத அய்யர் வந்திருந்தார்கள். அவர்கள் தேவஸ்தான ஐதிகங்களை விளக்கி, ஜடாயுகுண்டம் முதலிய விசேஷம் பற்றியும் சொன்னுர். ஆதீனத்தைப்பற்றியும், மகா சந்நிதானம் கயிலாய யாத்திரைக்கு எழுந்தருளியாகி இருப்பது, நயனிடாலில் ராஜபவனத்தில் மகாசந்நிதானத்துக்கு உபசரிப்பு நடந்தது பற்றியும் குறிப்பிட்டார். கயிலாய யாத்திரை என்று கேட்டவுடன் மிகவும் பிரமிப்பு அடைந்தார். மிக்க சந்தோஷம் எனத் தெரிவிக்கும்படி சொல்லிப்போனுர்.

7—7—1959 மாலை திருக்கடவூர் தேவஸ்தானத்திற்கு, கவர்னர் தம்பதிகள் சமேதராக விஜயம் செய்தார்கள். வரவேற்பு விமரிசையாக நடத்தப்பட்டது. கோவிலைச்சுற்றிப் பார்த்துக் கொண்டு சித்திரங்கள் எழுதி இருப்பதையும் உருவங்கள் அமைக்கப்பட்டிருப்பதையும் கண்டு ஐதிக விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு வந்தார். சுவாமி தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி சந்நிதியில் விமரிசையாக அர்ச்சனை நடத்தி ஆசீர்வாதம் சொல்லப்பட்டது. பட்டு கட்டப்பட்டது. ஆசீர்வாதத்தை ரசித்துக்கேட்டார். ஸ்ரீ அம்பாள் சந்நிதியிலும் அந்தப்படியே செய்யப்பட்டது. மிக்க திருப்தி அடைந்தார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுருவத்தை அங்குக் கண்டபோது, கூட இருந்த மடத்து மானேஜர், மகா

சந்நிதானத்துக்கு அங்கே அம்பாள் சந்நிதியில் உள்ள ஈடு பாட்டைப்பற்றிச்சொல்லிக் கயிலாயயாத்திரைசெய்ய எழுந்தருளி இருப்பதையும் வழியில் உத்தரப்பிரதேச கவர்னர் வரவேற்றதை யும் ராஜபவனத்தில் உபசரிப்பு நடந்ததையும் சொல்லக்கேட் டதும், மகாசந்நிதானத்தின் திருவுருவத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டு ஆதீனத்தைப்பற்றிப் பெருமையாகவும் பாராட்டிச் சந்தோஷத்துடன் சொன்னார்.

8—7—1959 மாலை திருவாரூர் கோவிலுக்கு, கவர்னர் தம்பதிகள் விஜயம் செய்தார்கள். இராஜாங்கக் கட்டளை சுவாமிகள் அப்போது அவர்களை வரவேற்று மாலை சூட்டினார்கள். ஸ்ரீ அம்பாள் கோவிலில் உட்காரவைத்துப் பிரசாதம் கொடுத் தார்கள். அப்போது ஆதீன வெளியீடு சித்தாந்த புத்தகங்கள் கட்டளை சுவாமிகளால் கொடுக்கப்பட்டன. விவரங்கள் கேட்டுச் சந்தோஷம் தெரிவித்துக்கொண்டார்கள்.

திருச்சிராப்பள்ளியில் சிவப்பிரகாச விரிவுரை

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பெருங் கருணையால் சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் சிவப்பிரகாச விரிவுரை நடை பெற்றது. ஸ்ரீ சாரதா பீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் விரிவுரை வகுப்புத் தொடக்க விழாவை நிகழ்த்தி அருளினார்கள்.

தருமையாதீனப் புலவர், சித்தாந்த சிரோமணி, சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி, முதுபெரும் புலவர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள் சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றாகிய சிவப்பிரகாசம் என்னும் நூலுக்கு விரிவுரை நிகழ்த்தி னார்கள். விரிவுரை வகுப்பு 31—5—58 முதல் 20 நாட்கள் காலை 7-30 மணி முதல் 9 மணி வரை நடைபெற்றது.

திருச்சிற்றம்பலம் ஆதாரப்பள்ளித் தலைவர் திரு. மு. அருணா சலம் பிள்ளை M. A., அவர்கள் தலைமையில் நிறைவு விழா நடை பெற்றது. விரிவுரைவகுப்பிறகு அரசாங்க அலுவலர் வணிகர்

முதலிய மெய்யன்பர்கள் பலர் நாடோறும் கேட்டனர். உயர்திரு. G. வரதராஜப் பிள்ளை B. A., அவர்கள் முயற்சியை யாவரும் பாராட்டினர்.

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapura Adhinam
Sri Panchanadeeswaraswami Devasthanam,
Tiruvayaru.

Madras Governor's Camp,
July, 5, 1959.

Myself and my wife had the good fortune to visit Sri Panchanatheeswarar temple at Tiruvayyaru this afternoon and worshipped at the temple, and later we visited the Thyagarajasamadhi nearby. The temple and its premises are kept neat and clean and the temple authorities and the priests appeared to be taking interest in maintaining the temple properly.

(Sd.) BISNURAM MEDHI
Governor of Madras

அட்டைப்பட விளக்கம்:

இரு பெருஞ் சமயத் தலைவர்கள் சந்திப்பு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை 16—6—59 வியாழக்கிழமை சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீனத் திருமடத்தில் சந்தித்தார்கள். திருமடம், கல்வி நிலையங்கள், வேத சிவாகம பாடசாலைகள் சார்பில் வரவேற்புரைகள் வாசிக்கப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் ஸ்ரீ சாரதா பீடம் சங்கராசாரிய சுவாமிகள் அவர்களும் சந்திக்கும் அருட் காட்சி.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே, முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விகாரிஷூ ஆடிமீ 1வ முதல் 31வ முடிய)

(17—7—59 முதல் 16—8—59 முடிய)

விகாரி ஷூ ஆனிமீ 32வ (16—7—59) குருவாரம் உதயாதி நாழிகை 42-56 அளவில் கடகரவி தக்ஷிணுயன புண்ணிய காலம்.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி 1, 2 பாதங்களும், பரணி முதல் பாதமும் சுபத்தைத் தரும், நினைத்ததெல்லாம் கைகூடும். விவகாரம் ஜேயிக்கும். நஷ்டமான பொருள் வந்து சேரும், ஆரோக்யம் உண்டாகும். அசுவதி 3, 4 கார்த்திகை 1ம் சுபமிராது, ரொம்பவும் கலக்கத்தைக் கொடுக்கும். தெய்வ பலம் உள்ளவர் சுகம் அடைவார்கள். வெள்ளி, சனி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் விசேஷ நன்மையைக் கொடுக்காது. குடும்பஸ்தர்களாலும் பந்துமித்திரர்களாலும் அவமதிப்பு ஏற்படும். தன் வாக்கே தனக்கு சத்ருவாகும், ரோகிணி 4 பாதங்களும் ரோகத்தைத் தரும், கடனை விருத்தி பண்ணும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் அமங்களத்தையும் செய்நன்றி மறத்தலையும் பெரியவர்களுடைய சாபத்தையும் உண்டுபண்ணும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் வீண் அலைச்சலையும் தன நஷ்டத்தையும் உண்டுபண்ணும். திருவாதிரை 4 பாதங்களும் ஆரோக்கியத்தைத் தரும், நஷ்டமான பொருள் வரும், கவலை நீங்கும். புனர்பூசம் முதல் பாதம் அதிக

துன்பத்தையும் தாங்கமுடியாத சோகத்தையும் நஷ்டத்தையும் தரும். இடம் மாறச்செய்யும். புனர்பூசம் 2, 3 பாதங்கள் ஜெயத்தை தரும், லாபம் உண்டாகும். தெய்வ பலம் கிட்டும். உலகப் பிரசித்தி ஏற்படசெய்யும், சத்துருக்கள் சரண் அடை வார்கள் சுபம் உண்டாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4 ம் பாதம் வித்யாலாபத்தையும் ஆரோக் யத்தையும் உண்டுபண்ணும். புத்தி தீக்ஷிண்யமும் குடும்ப விருத்தியும் ஏற்படும். பூசம் 4 பாதங்களும் உலக மதிப்பைத் தந்து பெரிய பதவிகளையும், மேலோர் பெரியோர் அன்பையும் தரும், வெகு காலமாய் எதிர்பார்த்து நடைபெருத காரியம் வெற்றி அடையும், ஆயில்யம் 4 பாதங்களும் விவ கார வெற்றியும், ஜீவன லாபத்தையும் தனதான்யப் பெருக்கத் தையும் தரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் உத்யோகத்தில் பிரமோஷனைத் தரும். மேலோர் பெரியோர் அன்பு ஏற்படும். குடும்பம் ஓங்கும். பூரம் 4 பாதங்களும் அதிகச் செலவையும் தொழில் மந்தத் தையும் குடும்பத் தொல்லைகளையும் உண்டாக்கும், உத்திரம் முதல் பாதம் சுபாசுபங்கள் மிச்ரமாய் நடக்கும், அடிக்கடி சஞ்சார பலனைத் தரும், தொழிலில் கவலையைக் காட்டும் புதன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3 பாதங்கள் மந்தமாயும் அதிகக் கவலை யோடும் சிறு நஷ்டங்களோடும் ஓடிக்கொண்டிருக்கும். உத்திரம் 4 ம் பாதம் சந்தோஷத்தை தரும். உத்யோக உயர்வு ஏற்படும். எதிர்பாராத லாபங்கள் வந்து சேரும், குடும்ப சுகம் உண்டாகும் ஹஸ்தம் முதல் பாதம் தனதான்ய விருத்தியையும் ஆரோக் யமும் குடும்ப சுகமும் ஏற்படச்செய்யும். ஹஸ்தம் 2, 3, 4 பாதங்கள் உத்தியோக லாபத்தையும் தூர சஞ்சார பலன்

களையும் தெய்வீக தோற்றத்தையும் அஸாத்யமெல்லாம் சுலப மாகச் சாதித்துக் கொடுத்து நித்ய மங்களத்தை உண்டாக்கும், சித்திரை 1, 2 பாதங்கள் குடும்ப சுகத்தைத்தரும், கடன் நீங்கும் சுபசந்தோஷங்கள் ஏற்படும், வியாழன் வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் பூர்ண சுபத்தைத் தராது. எதிலும் கலக்கத்தையும் உண்டுபண்ணும், சுவாதி 4 பாதங் களும் ஆரோக்யத்தைத் தரும், சென்றவிடமெல்லாம் சிறப் புறச்செய்யும், தெய்வீக பலம் பிரகாசிக்கும், விசாகம் 1, 2, 3 பாதங்கள் கிருஷி கார்யங்களில் கலக்கத்தையும், கலகத்தையும் நஷ்டத்தையும் உண்டுபண்ணும், சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4 ம் பாதம் வனசஞ்சாரத்துக்கு ஒப்பாகவும் மிகுந்த ஈதிபாதைகளையும் தரும். அனுஷம் 4 பாதங்களும் மிச்ரமாய் நடக்கும். தொழில் மந்தம் காட்டும். கேட்டை 4 பாதங்களும், இல்லற சுகத்தைத் தரும். உத்யோக உயர்வு ஏற்படும், மனம் சந்தோஷமாய் இருக்கும். திங்கள், புதன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் 4 பாதங்களும் மிச்ரமாய் நடக்கும், தன் இஷ்டம் போல் எதுவும் நடக்காது, தெய்வீக பலம் குறைந்து காட்டும் பூராடம் 4 பாதங்களும் தனதான்ய விருத்தியைத் தரும் புத்ராதி களால் சௌக்கியம் உண்டாகும், நினைத்த கார்யமெல்லாம் கைகூடும், உத்திராடம் முதல் பாதம் ஆரோக்கியத்தைத் தரும், கடன் நீங்கும், சுபசந்தோஷம் உண்டாகும், நூதன கிரஹ லாபமும் வஸ்திராபரணச் சேர்கையும் ஏற்படச் செய்யும், புதன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் கிரயவிக்ரயங்களையும் இடம் மாறுதலையும் தரும், மிச்ரமாய் நடக்கும். திருவோணம் முதல்

பாதம் சுபமிராது. செய்காரியங்கள் எல்லாம் வீணாகும், புண்ணிய பலமே இல்லாமல் போகும். திருவோணம் 2, 3, 4 பாதங்கள் ஆரோக்யத்தைத் தரும் கீர்த்தி பத்திரம் கிடைக்கும். நஷ்டமான பொருள் வந்துசேரும். கிரஹசுகம் ஏற்படும், வித்யாவிருத்தியாகும் உத்யோக லாபம் உண்டாகும், சுப சோபனாதிகள் மூலம் லாபம் அடையச்செய்யும். அவிட்டம் 1, 2 பாதங்கள் மிகப் பெரிய ஸ்தானங்களை வகிக்கச்செய்து கீர்த்தியை உண்டுபண்ணும் உத்யோக லாபம் உண்டாக்கும் சந்தோஷம் ஏற்படும். சனி செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் சுபமிராது. சதாகவலையைத் தரும், ஆனாலும் இல்லறம் ஓங்கும், சதயம் 4 பாதங்களும் சதா துக்கத்தையும் நஷ்டத்தையும் உண்டுபண்ணும் பூரட்டாதி 1, 2. 3 பாதங்கள் கிரஹ சுகத்தைத்தரும் அடிக்கடி சஞ்சாரத்தைம் உண்டுபண்ணும், ஆரோக்கியம் உண்டாகும் குடும்ப கவலை தீரும், புதன் வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி 4 ம் பாதம் தூர சஞ்சாரத்தையும் உத்தியோக லாபத்தையும் தரும், உத்திரட்டாதி 4 பாதங்களும் ரேவதி 4 பாதங்களும் நினைத்ததெல்லாம் கைகூடச் செய்யும் உத்தி யோக உயர்வும் ஸ்தாவர ஜங்கமசொத்துக்கள் கிடைத்தலும் பணப்பெருக்கமும் உண்டாகும், தெய்வ பலம் பிரகாசிக்கும், வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு:- மேற்படி ஆடிமாதம் தக்ஷிணாயனம் ஆரம்பம் முதல் தக்ஷிணாயனம் முடிய கிரஹநிலைகள் உலகத்திற்கு திருப்திகரமாக அமையாதபடியால் மகாஜனங்கள் அவரவர்கள் குலாசார மதாசாரத்தை நழுவவிடாமல் சத்தியமாயும், தர்ம மாயும், அஹிம்சையோடும் இருந்துகொண்டு நாஸ்திகமில்லாமல் அவரவர்களுடைய இஷ்டதெய்வங்களை உலக க்ஷேமத்தின் பொருட்டு பிரார்த்தித்துவர சகல பயமும் நீங்கி உலகம் சுபிக்ஷ மடையும், கடவுள் காப்பார்.

Camp: Himalayas
Bageshwar U. P.

மகா கைலாச யாத்திரையின் தொடர்ச்சி

3—7—59 திட்டப்படியே நைநிடாலிலிருந்து புறப்பட்டு அன்றிரவு 62 மைல் பிரயாணம் செய்து ஜாகேஷ்வார் என்னும் தலத்துக்குப் போனேம். அது பாலகைலாசம், ஜோதிர்லிங்கங் களுள் தாருகாவனம் நாகேசம் என்று சொல்கிறார்கள். அங்கு தரிசனம் செய்துகோண்டு வரும் வழியில் துண்டேஸ்வரர் (கேதாரம் போன்ற திருவுரு) அல்மோராவில் நந்தாதேவி, திரிபுரசுந்தரி, வியாகரணதேவீ, பிறகு சோமேசம், வைத்திய நாதம் தரிசனம் செய்துகோண்டு 4–7–59உ இரவு 8 மணிக்கு இங்கு வந்துசேர்ந்தோம். இங்கெல்லாம் காலை 4 மணிக்கே விடி யத்தோடங்கி இரவு 8 மணி வரை வெளிச்சம் இருக்கிறது. ஜகேஷ்வரத்தில் அட்டை அதிகம். சிலரைக் கடித்துவிட்டது. இங்கிருந்து கால்நடை தோடங்குகிறது. கடைசி தந்தி ஆபீஸ் இங்குதான். இதற்கு மேல் MILEM போஸ்டாபீஸ் உண்டு. கடைசி இந்திய எல்லை. இந்த வழியில் நந்தாதேவி, சிகரம் தரிசனம் கிடைக்கும். பிண்டாரி Glacier பார்க்கலாம். எல்லாம் மிக வசதியாகவே நடந்து வருகிறது.

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையத்தில்

மாதாந்தர வழிபாட்டுக் கூட்ட விழா

சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் மாதந்தோறும் முதல் வாரத்தில் நிகழும் வழிபாட்டுக் கூட்ட விழா 2—8—59 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5-30 மணிக்குத் திருவலி தாயம்பாடி என்று வழங்கும் திருவலிதாயத்தில் நடைபெறும். சைவ சித்தாந்த மகாசமாஜத்தினரும் பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையினரும் பிரசாரக் குழுவினருடன் வழிபாட்டில் கலந்து கோள்வார்கள்.

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapura Adhinam
Sri Panchanadeeswaraswami Devasthanam,
Tiruvaiyaru.

On intimation, His Holiness the Jagadguru Mahaswamigal of Sri Sringeri Mutt visited the famous temple of Sri Dharmasamvardhani Sametha Sir Panchanadeeswarar at Tiruvaiyaru this evening. His Holiness was received with all customary temple Honours by the Kattalai Tambiran of Dharmapuram Adhinam. His Holiness was taken round to all the Sannidis. His Holiness was immensely pleased that the temple premises was kept perfectly clean and to also find that the temple is well maintained and conducted under the able guidance of Dharmapuram Adhinam.

(Sd.) N. Lakshminarayana Sastri,
Private Secretary
to His Holiness the Jagadguru
Mahaswamigalavaru
of Sri Sringeri Mutt.

Tiruvaiyaru,
5—6—1959.

I visited the temple. I am very much impressed.

(Sd.) Viswanatha Nair,
Dist. Superintendent of Police,
Tanjore.

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil.

It is really a luck that brought us by accident on our way to Sirkali, The entire shrine is neat and tidy. It is a pleasure to have a darshan with the kind co-operation of the temple priest which is note worthy of mention.

(Sd.) M. Sundaram.
14—6—59.

Periapannai,
Kulikkarai.

மதிப்புரை

4000 ஆண்டுகட்கு முன்னர் வள்ளுவர்

ஆசிரியர்: கணக்காயர் புலவர் செந்துறை முத்து அவர்கள்: வெளியீடு — வள்ளுவர் பண்ணை, பிராட்வே, சென்னை 1; பக்கங்கள் 81. விலை ரூ. 1—50.

இந்நூலாசிரியர் பல்லாண்டுகளாகப் பத்திரிகைகளில் கட்டுரைகளும், தனிநூல்களும் எழுதிவரும் தமிழாராய்ச்சியாளர். இந்நூலில் திருவள்ளுவர் காலத்தை ஆராய்ச்சி செய்து மிக்கக் காலத் தொன்மை உடையது குறள் என்று நிறுவுகின்றார். மூன்று பெரும்பிரிவுகளைக்கொண்டு இந்நூல் விளங்குகின்றது. முதற்பிரிவில் செங்கோன் தரைச் செலவு என்று நூலிலும் குறளிலும் காணப்படும் சொல்லொப்புமை நன்கு விளக்கப்படுகிறது. இரண்டாம் பிரிவில் வள்ளுவர் குறள் இலக்கியம் கண்டே தொல்காப்பியர் இலக்கணம் கண்டார் என்ற குறிப்பு விரிக்கப்படுகிறது. மூன்றாம் பிரிவில் வள்ளுவர் காலத் தமிழகம் எவ்வாறிருந்திருக்கக் கூடும் என்றியம்பப்படுகிறது தம் நுண்மாண் நுழைபுலங்கொண்டு ஆங்காங்குக்குறட்பாக்கள் சிலவற்றிற்குவிளக்கமும் கூறுகிறார் ஆசிரியர். புதுமையும் பழமையும் குழைந்த நூல்நடை. ஆராய்ச்சி மணம் வீசும் தொகுப்பு. அழகானபதிப்பு. வள்ளுவர் காலத்தை மிகப் பிந்தியதென்பார்க்கு இந்நூல் விடை கூறி மறுக்கும். ஆசிரியர்க்குத் தமிழுலகம் பெரிதும் நன்றி பாராட்டும். தமிழரனைவரும் வாங்கிப் பயில வேண்டுகிறோம்.

—சோ. சிங்காரவேலனார்.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

கோடுப்பா ரிவாதவ னம்பக மற்றவன் கூறுந் தன்சோற்
றடுப்பா ரிலாதவன் றாரணி மன்னவன் றாரணியிற்
படுப்பா ரிலாதவன் மாவீரன் செத்தபின் பாடையிலிட்
டெடுப்பா ரிலாதவ னேற்பார்க் கிடையூ றிழைப் பவனே. 56

Printed & Published by K. Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—7—59.